உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-180

ஜுலை 16-31 2024



e-magazine

## ஒருநாழிகை தியானம் செய்தால் உலகாளும் ஞானசக்தியை அருளும்

# தோரணமலை முருகன்

# நிலையான செல்வம் தரும் திருக்கோவில்

கும்பகோணம் மாயவரம் சாலையில் கும்பகோணத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது ஆடுதுறை எனப்படும் "திருவாடுதுறை". ஞானசம்பந்தரிடம் அவர் தந்தை யாகம் செய்ய தேவையான பொருள் கேட்க, சம்பந்தரும் இத் தல இறைவன் மாசிலாமணி ஈஸ்வரரை வேண்டி பதிகம் பாட, பரம் பொருளும் 1000 பொற்காசுகள் கொண்ட பொற்கிளியை பலி பீடத்தின் மீது வைத்தருளினார்.

**செல்வ வளம் பெருக**
**சம்பந்தர் அருளிய பதிகம்**

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல்
தொழுதெழுவேன்!
கடல்தனில் அமுதொடு
கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய
வேதியனே!
இதுவோ எமைஆளுமாறு
ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே..!

இத்தலத்திற்கு சென்று இத்தல ஈசனை தொழுது சம்பந்தர் அருளிய மேற்கண்ட பதிகத்தை கூறிவந்தால் நிலையான நியாயமான செல்வங்கள் கிடைக்கும்.


இவ்வாறு ஈசன் அருளும் செல்வம் நிலையானதாக இருக்கும்.



# மரண பீதியை போக்கும் திருநீலக்குடி

ஒருசிலருக் பொதுவாகவே மரண பீதி இருக்கும் இதற்கு காரணம் இவர்களின் ஜாதக ரீதியாகா ஜாதகத்தில் மரண கண்டம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு உள்ள எம பயம், மரண பயம் நீங்க வணங்க வேண்டிய திருக்கோயில், கும்பகோணம் காரைக்கால் செல்லும் வழியில், கும்பகோணத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில், சிவ பெருமான் திருநீலகண்டராய் அருளும் "திருநீலக்குடியாகும்". மூலவருக்கு செய்யப்படும் தைலாபிஷேகம் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு எண்ணெய் அபிஷேகம் செய்தாலும், அவ்வளவும் பாணத்திற்குள் சென்றுவிடும். ராகு தோஷம் நீங்க உளுந்து, நீல வஸ்திரம், வெள்ளி நாகர், வெள்ளி பாத் திரம் போன்றவற்றை இத்தலத்தில் தானம் செய்ய வேண்டும். எம, மரண பயங்கள் நீங்க இத்தல இறைவனை வழிபட்டு, பின்னர்எருமை, நீல துணிகள், எள் போன்றவற்றை தானம் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் மரண பீதியிலிருந்து விடுதலை பெறலாம்.





e-magazine aanmeegamalar.com

## ஒருநாழிகை தியானம் செய்தால் உலகாளும் ஞானசக்தியை அருளும் கொடிய நோயையும் குணப்படுத்தும்

# தோரணமலை முருகன்

e-magazine
aanmeegamalar.com

தென்காசியிலிருந்து, கடையம் நோக்கி செல்லும் வழியில் தோரணமலை அமைந்துள்ளது. படுத்திருக்கும் யானையை வாரணம் என்று அழைப்பர், இந்த மலை படுத்திருக்கும் யானையைப் போன்று காட்சியளிப்பதால் 'வாரணமலை' என அழைக்கப்பட்டு, பின்னர் மருவி 'தோரணமலை' என்று கூறப்படுகிறது.

அறுபத்து நான்கு சுனைகள் கொண்ட தோரணமலையில், அந்த சுனைகளின் நீராலேயே, அங்குள்ள முருகன் கோயிலின் மூலவருக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

இந்த மலைக்கும், இங்கு வீற்றிருக்கும் முருகனுக்கும் பல்வேறு சிறப்புகள் உள்ளது. முருகனின் ஒவ்வொரு ஸ்தலமும் ஒவ்வொரு சிறப்பு பெற்றது அந்த வகையில் தோரணமலை முருகனுக்கு அதிகப்படியான சிறப்புகள் உள்ளது.

முருகப்பெருமானின் 16 வடிவங்களை பற்றி கூறும் கந்த புராணத்தில் முதன்மையானதாக கூறப்படுவது ஞானசக்தி. இந்த ஞானசக்திக்குரிய வடிவமாக கையில் வேலுடன் மயில் வாகனத்தில் காட்சியளிக்கும் முருகப்பெருமானை தோரணமலையில் தரிசிக்கலாம்.

பொதுவாக ஒவ்வொரு ஸ்தலத்தையும் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம், தவம், தியானம் என்று பல்வேறு வகையில் பிரித்து கூறுவார்கள்.

ஆனால் தோரணமலை மேற்கண்ட மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம், தவம், தியானம் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரே ஸ்தலமாக விளங்குகிறது.


அகத்தியர் திருக்குற்றாலம் வந்தபோது அங்கு











வைணவத்தலத்தில் நின்ற கோலத்தில் எழுந்தருளிய பெருமாளை இலஞ்சி குமாரசாமியின் அருளால் சிவபெருமானாக்கி வழிபட்டு பொதிகைமலை நோக்கி வந்தார். வரும் வழியில் வானளாவ அமைப்பில் உயர்ந்து நிற்கும் தோரணமலையின் அழகில் மனம் மகிழ்ந்தார்.

சிறிது காலம் இம்மலையில் தங்கி தவம் புரியவும், சித்த மருத்துவம் ஆராய்ச்சி செய்யவும் விரும்பினார். அப்பொழுது தன் இஷ்ட தெய்வமான முருகப்பெருமானை மலைமீது தவமிருந்து வணங்கி வந்தார்.

மக்களின் நோய்களை தீர்க்கும் மருத்துவ ஆராய்ச்சியில் இம்மலையிலிருந்து ஈடுபட்டுவந்தார், அவருக்கு உதவியாக பிறவி ஊமையான ராமதேவரை அகத்தியருக்கு அவ்வையார் அறிமுகப்படுத்திவைத்தார்.

மருத்துவ ஆராய்ச்சியில் தனக்கு உதவியாகவும், சிகிச்சையில் சமயோசிதமாகவும் செயல்பட்ட தன் சீடன் ராமதேவனை பாராட்டிய அகத்தியர் அவரை தேரையர் என்ற சிறப்பு பெயரை சூட்டி அழைக்க தொடங்கினார்.

அகத்தியரின் மருத்துவ திறனை பயன்படுத்தி தேரையரின் சமயோசித புத்தியை வெளிப்படுத்தி சித்த மருத்துவத்தின் சிறப்பை உலகறிய செய்ய




முருகப்பெருமான் திருவிளையாடல் நடத்திய தலம் இது.

சீதையை தேடி ராமன் இந்த வழித்தடத்தில் வந்த போது, தோரணமலை முருகனை வழிபட்டதாக ஐதீகம் உள்ளது.

தோரணமலை அடிவாரத்தில் இருந்துசுமார் 926 படிகட்டுகள் கடந்து சென்றால் மலை உச்சியில் உள்ள முருகனை தரிசிக்கலாம். மலைப்பாதையின் நடுவில் சுயம்பு லிங்கத்தையும் தரிசிக்கலாம். அகத்தியருக்கு சிவபெருமான் இங்கு காட்சி கொடுத்ததால் சுயம்பு லிங்கம் உருவானதாக கூறப்படுகிறது.

மிகப்பழமையான இந்த தோரணமலையில் தற்போது உள்ள முருகன் சிலையை சுனையில் இருந்து மீட்டெடுத்து சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளான் மதுரையை ஆண்ட வெங்கலநாயக்கன் என்னும் மன்னன்.

தோரணமலையில் ஒரு நாழிகை நேரம் தியானம் செய்து முருகப்பெருமானை வழிபட்டால் உலகையே வெல்லும் ஞானம் கிடைக்கிறது. எப்படிப்பட்ட நோயும் தானாகவே குணமடைகிறது. திருமணம், மகப்பேறு ஆகியவற்றுக்காகவும், நோய் குணமாகவும், சொத்து தகராறு, குடும்பத்தகராறு நீங்கவும் தோரணமலை முருகனை வழிபட்டு வருகின்றனர். மருத்துவ படிப்பு, விரும்பிய வேலை, தொழில் அமையவும் உயர்பதவி கிடைக்கவும் அருள்பாலிக்கிறான்.




e-magazine
aanmeegamalar.com



# பில்லி, சூன்யத்தை அழித்து, இன்பமான வாழ்வு தரும்

# சூரிய விரதம்

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையில் இறை சக்திக்கு எதிரான சக்திகள் உருவாவது வழக்கம், அந்த வகையில் இறைவனை வணங்கும் கூட்டத்திற்கு இணையாக துஷ்ட சக்திகள் மூலம் செய்வினை, மாந்திரிகம் போன்றவற்றை பயன்படுத்தி தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் போக்கு தற்போதைய கலிகாலத்தில் புதிதாக பரவிவருகிறது.

மேற்கண்ட செய்வினை, மாந்திரிகம் போன்றவை ஒரு குறிப்பிட்ட காலம் வரை பயன்தரும் வகையில் நமக்கு தெரிந்தாலும், ஒருகட்டத்தில் அந்த தீய சக்திகளாலேயே அதைப் பயன்படுத்துபவர் அழிந்துவிடவார்கள்.

ஆனாலும், தீய சக்திகளிடம் இருந்து நல்லவர்களை காப்பாற்றும் விதமாக நமது முன்னோர் பல்வேறு வழிபாட்டு முறைகளை, பல்வேறு

இறை சக்திகளைப் பற்றி கூறியுள்ளனர்.

நமது பாரம்பரியமிக்க இந்து மதத்தில் இறைவனை வழிபடவும், அவரின் முழுமையான அருளாற்றலை பெறவும் பல வகையான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதில் ஒரு முறைதான் விரதம் அல்லது நோன்பு மேற்கொள்வது ஆகும்.

ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை வழிபடுவதற்கு ஒரு குறிப்பிட்ட விரத, விரத வழிபாட்டு முறை என பல விரத வழிபாட்டு முறைகள் இருக்கின்றன.

அந்த வகையில் உலகிற்கு ஒளியை தந்து, அனைத்திற்கும் உயிராற்றலை தருகின்ற சூரிய பகவானின் அருளை பெற்று தரும் "ஞாயிறு விரதம்" அல்லது "சூரிய விரதம்" மேற்கொள்ளும் முறை பற்றியும், அதனால் கிடைக்கும் பலன்கள் என்ன என்பதையும் எளிமையாக பார்ப்போம்.

"ஞாயிறு விரதம்" அல்லது "சூரிய விரதம்" இருக்க விரும்புவர்கள் எல்லா காலங்களிலும் இவ்விரதத்தை மேற்கொள்ளலாம் என்றாலும் "ஐப்பசி" மாத வளர்பிறை ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த விரதத்தை அனுஷ்டிப்பது மிகவும் சிறப்பானதாகும்.

இந்த ஞாயிறு விரதத்தை எந்த ஒரு மாதத்திலும் வளர்பிறை ஞாயிற்றுக்கிழமையில் அதிகாலையிலேயே எழுந்து குளித்து முடித்துவிட்டு, சூரியன் உதிக்கின்ற காலை வேளையில் சூரியனை தரிசித்தவாறே, அவருக்குரிய மந்திரங்களை துதித்து வழிபட வேண்டும்.



பின்பு நவகிரக சந்நிதிக்கு சென்று சூரிய பகவானுக்கு செந் தாமரை பூவை சமர்ப்பித்து, கோதுமை தானியங்கள் சிறிதளவு வைத்து, நெய் தீபங்கள் ஏற்றி, வாசனை மிக்க தூபங்கள் கொளுத்தி, கோதுமை கொண்டு செய்யப்பட்ட இனிப்பு உணவுகளை நைவேத்தியமாக வைத்து சூரிய பகவானின் காயத்ரி மந்திரங்கள், பீஜ மந்திரங்கள் போன்றவற்றை108 எண்ணிக்கை அல்லது 1008 எண்ணிக்கையில் துதித்து வழிபட வேண்டும்.



இந்த விரதம் இருப்பவர்கள் அந்த ஞாயிற்றுக்கிழமை முழுவதும் திடஉணவு சாப்பிடாமல் நோன்பிருந்து மறுநாள் காலையில் சூரிய தரிசனம் செய்த பின்பு, சூரிய பகவானுக்கு வீட்டிலேயே ஒரு செம்பு பாத்திரத்தில் சிறிது நீர் நிவேதனமாக அளித்த பின்பே விரதத்தை முடிக்க வேண்டும்.

உணவு சாப்பிட வேண்டிய நிலையிலிருப்பவர்கள் நீராகாரம், பழச்சாறுகள் போன்றவற்றை அருந்தி விரதமிருக்கலாம்.

சூரிய விரதம் மேற்கொள்ளும் நபர்களுக்கு உடலாரோக்கியம் மேம்படும்.

கொடிய நோய்கள் ஏதும் அண்டாது. முகத்தில் ஒரு வசீகரம் உண்டாகும்.

சமூகத்தில் பிறர் மதிக்கின்ற சூழ்நிலை ஏற்படும். தந்தையின் உடல்நலம் மேம்பட்டு அவரின் ஆயுள் நீடிக்கும். பொருளாதார வளர்ச்சி உண்டாகும்.

துஷ்ட சக்திகள், செய்வினை மாந்திரிகம்போன்றவை சூரிய விரதம் இருப்பவர்களை அண்டாது.

# கை சின்னத்தை கொடுத்த பெரியவா

காங்கிரஸ் கட்சியின் சின்னம் கை என்பது அனைவரும் அறிந்ததே இந்த கை சின்னத்தை இந்திராகாந்திக்கு எடுத்து கொடுத்து 1976 ல் நலிவுற்ற காங்கிரஸ் கட்சிக்கு கை கொடுத்து மகாபெரியவா அனுகிரகம் செய்தார்

1977 ல் இந்திரா காந்தி ரேபரேலி தொகுதியில் ராஜ் நாராயணனிடம் தோல்வி கண்டார் ஜனதா வெற்றி பெற்று இந்திராவை எதாவது ஒரு வகையில் கைது செய்ய முயற்சி செய்தது காங்கிரஸ் கட்சியில் பிரம்மானந்த ரெட்டி , சவான், தேவராஜ் அர்ஸ் இந்திரா காந்தியை கட்சியை விட்டு ஓரம் கட்ட முயற்சி செய் தார்கள்

இந்திராகாந்தி தமிழ்நாடு வந்து பெரி யவாவை வந்து தரிசனம் செய்ய வந்தார் அந்த நேரத்தில் தேனம்பாக்கதில் மௌன விரதத்தில் இருந்தார்கள்.

இந்திராகாந்தி முன் நின்று தன்பிரச்சி னை தீர வேண்டும் என்று கை கூப்பி வணங்கி நின்றார் கிணற்றுக்கு அப்பால் அமர்ந்து இருந்த பெரியவா அஸ்திகிரி தந்திரத் தை ஜபித்தபடி கையை உயர்த்தி காட்டினார்.

உடன் வந்திருந்தவர்கள் இந்திராகாந்தி ஆசீர்வாதம் செய்வதாக நினைத்து கொண்டார் என்பதை புரிந்து கொண்ட பெரியவா தன் உதவியாளரை திரும்பி பார்க்க அவர் உடனே புரிந்து கொண்டு இந்திராகாந்தியின் உங்கள் கட்சி சின்னத்தை மாற்றி கை சின்னம் வைத்து கொள்ள சொல்கிறார்கள் என்று ஆங்கிலத்தில் உரைக்க அவர் திகைக்க அதோடு டெல்லி சென்றவர் அதோடு காங்கிரஸ் உடைய பசுவும் கன்று சின்னம் முடங்க ரெட்டிக்கு ராட்டை சின்னம் கிடைக்க இந்திராகாந்திக்கு கை கிடைக்க மறுவருடம் 1978 நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கர்நாடகா ஆந்திராவில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது

77ல் பதவி இழந்த இந்திரா 1979–ல் பிரதமராக பதவி ஏற்றார்

எல்லாம் பெரியவா ஹஸ்தம் செய்த மகிமை அதிமுகவிற்கு இலை சின்னம் காட்டியதும் மகா பெரியவா




e-magazine
aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# தரையில் சயனித்த பெருமாள், தரையில் அமர்ந்த தாயார்

# பாவம், சாபம், போக்கும் தலசயனப்பெருமாள்



பல்லவ மன்னர்களின் 7-ஆவது அரசனான மல்லேஸ்வரன் என்ற அரசனின் ஆட்சிக் காலத்தில், தினமும் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வந்தது. ஒரு நாள் திடீரென மல்லேஸ்வரன் அன்னதானம் வழங்குவதை நிறுத்திவிட்டான். இதனால் பொதுமக்கள் பசி, பட்டினியால் வாடினர். இதனால் கோபமடைந்த வைணவ அடியார்கள், 'மக்களின் பசியை தீர்க்க முடியாத நீ மன்னனாக இருக்க தகுதியற்றவன்' என்று கூறி, 'தண்ணீரில் மிதக்கும் முதலையாக இருப்பாய்' என்று சாபம் கொடுத்து விடுகின்றனர்.

பின்னர் அங்குள்ள புண்டரீக புஷ்கரணி குளத்தில் முதலை உருவில் மல்லேஸ்வரன் தண்ணீரில் வாழ்ந்து வந்தான். அப்போது அந்தக் குளத்தில் 1,000 தாமரை இதழ்களை பறித்து பெருமாளுக்கு படைக்க புண்டரீக மகரிஷி அங்கு சென்றார்.

குளத்து நீரில் முதலை உருவில் வசித்து வந்த மல்லேஸ்வரன் புண்டரீக முனிவரிடம், தன் தவறுக்கு வருந்தி, 'என்னுடைய சாபம் நீங்கப் பெற நீங்கள்தான் அருள்புரிய வேண்டும்' என்று மன்றாடி சாப விமோசனம் கேட் டான். அதற்கு முனிவர், 'நீ! மக்களை பசி, பட்டினியால் வதைத்தாய். உன் சாபம் நீங்கப்பெற வேண்டும் என்றால், 1000 தாமரை இதழ்களை பறித்துக்கொடு' என்று கேட்க, அவனும் பறித்துக் கொடுத்தான்.

பூக்களைப் ஒரு கூடையில் நிரப்பி, செல்லும் வழியில் கடல் குறுக்கிட்டதால், இரவு, பகலாக தன் கைகளால் கடல்நீரை வெளியே இறைக்கத் தொடங்கினார். கை சோர்ந்த போது, ஒரு முதியவர் அங்கு வந்து, "எனக்கு பசிக்கிறது; உணவு தாருங்கள். நான் இறைக்கிறேன்'' என்றார். மகரிஷியும் உணவு கொண்டுவரச் சென்றபோது, அவர் வைத்துச் சென்ற பூக்களைச் சூடிய முதிய வரோ திருமாலாக சயனக் கோலத்தில் காட்சி தந்தார்.

உடனே, "தான் எப்போதும் இறைவனின் திருவடியை தரிசிக்க வேண்டும். உலக உயிர்கள் அனைத்தும் பசியின்றி சுகமாக வாழ வேண்டும். மன்னன் மல்லேஸ்வரனின் சாபம் நீங்க வேண்டும்'' என வேண்டினார் மகரிஷி.



e-magazine
aanmeegamalar.com






அவ்வாறே வரமளித்தார் திருமால்.


அரசன் மல்லேஸ்வரனும் தனது சாபம் நீங்கப் பெற்று மீண்டும் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கும் பணியைத் தொடங்கினான். இதன் வரலாறு பிரம்மாண்ட புராண வாக்கியத்தில் சேத்ரகாண்டம் என்ற பகுதியில் விரிவாக சொல்லப்பட்டுள்ளது.

வைணவ திவ்ய தேசங்களில் 63ஆவது தலம் என்பதோடு, பூதத்தாழ்வாரின் அவதாரத் தல முமாக இத்தலம் விளங்குகிறது.

பொதுவாக எல்லா திருத்தலத்திலும் ஆதிஷே சன் மீது சயனக் கோலத்தில் காட்சி தருவார் ஆனால், இந்த திருத்தலத்தில் மட்டும் எங்கும் இல்லாத வகையில் பெருமாள் வெறுந்தரையிலே சயனக் கோலத்தில் காட்சி தருவது சிறப்பாகும்.

எம்பெருமான் சயனித்திருக்க, புண்டரீக மஹரிஷி கை கூப்பிய வண்ணம் அருகில் உள்ளார். மகரிஷிக்கு சயன கோலத்தில் நிலத்தில் கிடந்து காட்சி அளித்ததால் இப்பெருமாள் “தலசயனப் பெருமாள்’ என்று அழைக்கப்படுகிறார்.

மகாபலி சக்கரவர்த்தி ஆண்ட இடமாக “மாமல்லபுரம்‘ என கருதப்படுகிறது. இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் ராஜசிம்மன் காலத்தில் இந்த ஊர் விரிவடைந்ததாகவும் கூறப்படுகிறது.




மாமல்லபுரம் பகுதியில் இயற்கை சீற்றங்களினாலும், கடல் கொந்தளிப்பாலும், ஆங்காங்கே உள்ள கோவில்கள் சிதிலமடைந்து வந்த நிலையில், கடற்கரையில் அமைந்திருந்த தலசயனப்பெருமாள் கோவில் கடற்கரையிலிருந்து விஜயநகர அரசர்கள் காலத்தில் ஊரின் மையப்பகுதியில், ஸ்ரீதலசயன பெருமாளுக்கு பராங்குச மாமன்னரால் புதிதாக இக் கோவில் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

“கடல்மல்லைத் தல சயனத்தில் உறையும் இறைவனை பவளத்தூண், அமுதம், தீங்கரும்பு, பொற்குன்று, பக்தர்கள் இடர் கடியும் கற்பகம்‘ என்று பாடுகிறார் திருமங்கையாழ்வார்.

புண்டரீக மகரிஷி பாதம் பட்ட இந்த புஷ்கரணி தெப்பக் குளத்தில், மாசிமகத்தன்று தலசயன பெருமாளுக்கு தெப்ப உற்சவம் நடைபெற்று வருகிறது.

முன்னோர்களுக்கு இந்த புஷ்கரணி தெப்பக் குளத்தில் நீராடி மகாளய அமாவாசை உள்ளிட்ட விசேஷ தினங்களில் திதி, தர்ப்பணம் கொடுத்தால் காசி, கயா, ராமேஸ்வரத்தில் கிடைக்கும் புண்ணியத்தைவிட பல மடங்கு புண்ணியமும், மனநிறைவும், மகிழ்ச்சியும் கொடுக்கும் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.








e-magazine
aanmeegamalar.com

# தமிழக கோபுர சாயலில்
# கொல்கத்தாவில் கோவில்





மேற்கு வங்கத்தின் தலைநகரான கொல்கத் தாவின் தென் பகுதியில், லேக் கார்டன்ஸ் என்ற இடத்தில், பிரின்ஸ் அன்வர் ஷா தெருவில் அமைந்துள்ளது "ஸ்ரீராம் மந்திர்".

தென்னிந்திய முறைப்படி, அழகிய ராஜ கோபுரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட இத்திரு கோவில் தென்னிந்திய ஸ்தபதிகளை கொண்டு அமைக்கப்பட்டதாம்.

துவஜ ஸ்தம்பம், பலி பீடம் கடந்து, விரிந்துள்ள பெரிய மண்டபத்தில் நடு நாயகமாக அமைந்துள்ள சன்னதியில் மூலவர் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர் அருள்பாலிக்கின்றனர். சன்னதிக்கு நேர் எதிரே ஸ்ரீஅனுமனுக்கும் தனி சன்னதி உள்ளது. ராமர் சன்னதியின் ஒரு புறம் கலியுக தெய்வம்

"ஸ்ரீவெங்கடாஜலபதி" (பாலாஜி) சன்னதி யும், மறுபுறம் "ஸ்ரீஅலர்மேல் மங்கை" (பத்மாவதி) தாயார் சன்னதியும் பின்னர் அமைக்கப்பட்டதாம்.

இத்திருகோவிலில் பஞ் சாட்சர ஆகம முறைப்படி நித்ய பூஜைகளும், அனுஷ்டானங்கள் நடத்தபடு கின்றன.

எல்லா பண்டிகைகளும் பெரிய விழாவாக விமரிசை யாக கொண்டாடபடுகிறது.

"ஸ்ரீராம நவமி" பிரம்மோற் சவமாக கொண்டாட படுகி றது.



உயிரோட்டம் உள்ள அழகான ஸ்ரீராம, சீதா, லட்சுமணர், மற்றும் ஸ்ரீபத்மாவதி சமேத பாலாஜியை தரிசிக்கும் போது அளவில்லாத ஆனந்தமும், ஆத்ம திருப்தியும் கிடைக்கிறது. இங்கு ருசியான தென்னிந்திய பிரசாதமும், தென்னிந்திய அன்பர் களின் நட்பும் கிடைக்கிறது.



கொல்கத்தா செல்லும் அன்பர்கள் தவறாமல் ஸ்ரீராமர் கோவில் சென்று தரிசித்து வாருங்கள் !!!

– ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036.
Telengana

# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 167ம் ஆண்டு ஆடிபூராடம் அவதார விழா






சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 167ம் ஆண்டு ஆடிபூராடம் அவதார விழா சிவனடி யார்கள் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட்டுக்கோல் மாயண்டிசுவாமி தவசாலை கோவில் உள்ளது. இது சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்க ஸ்தலம்மாகும்.

இங்கு மாதந்தோறும் அமாவாசை பௌர்ணமி நாட்களில் சிறப்பு அன்னதானம் நடைபெறும்.மேலும் தினந்தோறும் நித்ய அன்னதானமும் நடைபெறுகிறது. ஆண்டு தோறும் ஆடி பூராடம் நட்சத்திர நாளில் அவதார விழா நடைபெறும். ஜூலை 20 ந்தேதி சனிகிழமை சூட்டுக்கோல் மாயாண்டிசுவாமிகள் 167 ம் ஆண்டு அவதார விழா காலை 7மணிக்கு சிறப்பு யாகத்துடன் தொடங்கியது.

கட்டிக்குளம் கிராமத்தில் மகா சித்தர் மாயாண்டி சித்தர்பிறந்த பட்டமான் இல்லத்தில் சிறப்பு யாக மும் பூஜைகள் நடைபெற்றது. கருப்பனேந்தல் மடம் தவச் சாலையில் அமைந்துள்ள கட்டிக்குளம்ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்கமான இடத்தில் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதாரவிழா சிவாச்சாரியார்களால் சிறப்புவேள்வியாகமும் பூர்ணாஹுதி பூஜை, அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது.


அழகுராஜா

அன்று இரவு 8.00 மணிக்கு பூப்பல்லக்கில் கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி களின் திருவுருவம் வீதி உலா நடைபெறுகிறது.

விழாவில் மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், ஆகிய மாவட்டங்களில் இருந்தும் மற்றும் தமிழகத்தில் உள்ள ஏராளமான பக்தர்கள் சிவன டியார்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

அவதார விழா ஏற்பாடுகளை சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்க மான இடம் பரம்பரை தர்மகர்த்தா மற்றும் விழா குழுவினர் கிராமப் மக்கள் செய்து இருந்தனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த


**180** க்கும் மேற்பட்ட இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# காசியில் தரிசிக்கவேண்டிய சூரிய சன்னதிகள்



e-magazine
aanmeegamalar.com

## திரௌபத் ஆதித்யா

பாண்டவர்கள் வனவாசம் சென்றபோது, திரௌபதி தன் கணவர்களின் நிலையைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டாள். (திரௌபதி பாண்டவர்கள் ஐந்து பேரையும் திருமணம் செய்து கொண்டு, அவர்களுடன் காடுகளுக்கும் பிற அறிந்ததே). இடங்களுக்கும் வனவாசம் சென்றது அனைவரும்



திரௌபத் ஆதித்யா

அவள் காசிக்கு வந்து சூரிய பகவானிடம் தீவிரமாக பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். அவளது நேர்மையால் சூரிய பகவான் மிகவும் நெகிழ்ந்து அவள் முன் தோன்றினார். அவர் அவளிடம் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, அந்தப் பாத்திரம் "ஒருபோதும் காலியாகாத பாத்திரமாக" இருக்கும் என்று அவளிடம் கூறினார். இதனால்



அவள் எத்தனை விருந்தினர்களுக்கு உணவளித்தாலும் பாத்திரம் ஒருபோதும் காலியாகாது. அவள், உள்ளவரும் சாப்பிட்ட பிறகு, கடைசியாக சாப்பிட வேண்டும். (இப்போது கூட குடும்பத்தில் பெரியவர்கள், விருந்தினர்களுக்கு முதலில் உணவளிக்க வேண்டும், வீட்டுப் பெண்கள் கடைசியாக சாப்பிட வேண்டும் என்று கூறுகிறார்கள்).

சிவபெருமான தனக்கு அளித்த ஒரு தெய்வீக விருப்பத்தைப் பற்றி சூரியனும் திரௌபதியிடம் அதன்படி, கூறினார். காசியில் விஸ்வேஷவரரை வேண்டி வரும் பக்தர் முதலில் சூரியனை வேண்டிக் கொண்டால், அந்த பக்தரைப் பற்றிக் கொண்டிருக்கும் அனைத்து துக்கங்களையும் நீக்கும் சக்தி சூரிய பகவானுக்கு உண்டு. இத்தலத்தில் தம்மை மனதாரப் பிரார்த்தனை செய்பவர் ஒருபோதும் பசியுடன் இருக்கமாட்டார் என்றும் சூரிய பகவான் இங்கு கூறுகிறார். (காசி காண்டம், அத்தியாயம் 49).

இங்கு அமைந்துள்ள அழைக்கப்படுகிறார். ஆதித்யா திரௌபத் என்று அழைக்கப் படுகிறது.

## கங்கா ஆதித்யா

புனிதமான கங்கையை வழிபடுவதற்காக சூரிய பகவான காசியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதாக நம்பப்படுகிறது.

இன்றும் சூரிய பகவான் மேற்குறிப்பிட்ட



e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



இடத்தில் கங்கையின் ஸ்தோத்திரங்களைப் படித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார் என்று நம்பப்படுகிறது. கங்கைக்கரையில் சூரியனின் வடிவம் கங்கா ஆதித்யா என்று அழைக்கப்பட்டது.

கங்கா ஆதித்யாவை வழிபடும் ஒரு தீவிர துன்பத்தையும் பக்தன், எந்தத் சந்திக்க மாட்டான், யாராலும் ஏமாற்ற ப்பட மாட்டான். (காசி காண்டம், அத்தியாயம் 51).

## கேசவ ஆதித்யா

ஒருமுறை சூரிய பகவான் வானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். தூரத் திலிருந்து ஆதி கேசவர் (விஷ்ணு) சிவலிங் கத்தை வணங்குவதைக் கண்டார். மிகவும் ஆர்வத்துடன், சூரிய பகவான் பூமிக்கு வந்து, ஆதி கேசவர் பிரார்த்தனையை முடித்த பிறகு, அவரிடம் ஒரு கேள்வியை முன் வைத்தார்.

முழு உலகமும் விஷ்ணுவை அந்தராத் மாவாகக் கருதும் போது, அவர் (விஷ்ணு பகவான்) சிவபெருமானை ஏன் வணங்க வேண்டும் என்று சூரிய பகவான் கேட்டார். (விஷ்ணு பகவான் ஏன் சிவ பகவானை வணங்குகிறார் என்று சூரிய பகவான் ஆச்சரியப்பட்டார்.) அவரது கவலையைத் தணிக்க, விஷ்ணு பகவான் காசி க்ஷேத்திரத்தில் சிவபெருமான் உயர்ந்த கடவுள் என்றும் அவரை அனைவரும் வணங்க வேண்டும் என்றும் பதிலளித்தார்.

விஷ்ணு, காசியில் லிங்க பூஜையின் முக்கியத்துவத்தை விரிவாக விவரித்தார், ஒரு பக்தன ஒரு சிவலிங்கத்திற்கு அபிஷே கம் செய்து தண்ணீரை பிரசாதமாக உட்கொண்டால், அனைத்து புனித தீர்த்தங்களிலும் நீராடும் புண்ணியத்தைப் பெறுகிறான். காசியில் சிவபெருமானை லிங்க வடிவில் வழிபடுமாறு சூரியனையும் விஷ்ணு பகவான் அறிவுறுத்தினார். (காசி



கேசவ ஆதித்யா

காண்ட், அத்தியாயம் 51).

இந்த புனிதமான அறிவை வழங்கியதற்காக சூரிய பகவான் ஆதி கேசவரை தனது குருவாகக் கருதினார். மேலும் சூரிய பகவான் அந்த இடத்தில் கேசவ ஆதித்யா என்று அழைக்கப்பட்டார்.

காசி காண்டத்தின்படி, பாதோதக தீர்த்தத்தில் நீராடி, கேசவ ஆதித்யாவை வழிபடுபவர் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார். மாக மாதம் (ஜனவரி 21 பிப்ரவரி 20) எந்த சப்தமி நாளிலும் ஞாயிற்றுக் கிழமையுடன் இணைந்திருக்கும் போது சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அத்தகைய நாட்களில், பக்தர்கள் பாதோதக கிணற்றில் (தீர்த்தத்தில்) நீராடி, கேசவ ஆதித்யாவை வழிபடுவது நல்லது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

e-magazine
aanmeegamalar.com

# கீதாசமையல் ஸ்பெஷல் புட்




| |
|---|
| தூதுவளை கீரை இட்லிபொடி |
| முடக்கத்தான் கீரை இட்லிபொடி |
| வல்லாரைக் கீரை இட்லிபொடி |
| முருங்கை கீரை இட்லிபொடி |
| கொள்ளு இட்லிபொடி |
| கறிவேப்பிலை இட்லிபொடி |

**மூட்டுவலி,**
**ஞாபகமறதி, இளநரை,**
**பிரச்சனைகளை**
**தீர்க்கும் கீரை வகை**
**இட்லிபொடிகள்**

**கருப்பு உளுந்து**
**கஞ்சி மாவு**
**41 சிறுதாணிய**
**சத்துமாவு**

fssai
R.N.22424543000080

மேற்கண்ட அனைத்தும்
நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன்
வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.

**முதுகுவலி, வயதுக்கு வந்த பெண்களுக்கும்,**
**கணினியில் அதிகநேரம் பணிபுரிபவர்களுக்கு ஏற்படும்**
**எலும்பு தேய்மானம், கழுத்து பிரச்சனைகளை தீர்க்கும்**
**கருப்பு உளுந்து, சுக்கு கஞ்சி மாவு**




**SPECIAL FOOD**

**இயற்கை**
**மூலிகைகளால்**
**சுத்தமாக**
**தரமாக**
**தயாரிக்கப்பட்டது**

மேலும்விபரங்களுக்கு: 7550199561

# பாம்பு வடிவாக மனித ஆத்மாக்கள்

பாம்பை கண்டால் படையும் நடுங்கும் என்று பழமொழி இருக்கிறது. கவசம் தரித்து ஆயுதங்கள் பூண்டு எதிரிகளின் தலையை பந்தாட வருகின்ற படைவீரர்கள் கூட தங்களது அணிவகுப்பிற்குள் பாம்பு புகுந்துவிட்டால் அஞ்சிநடுங்கி சிதறி ஓடிவிடுவார்கள். என்பது இந்த பழமொழியின் கருத்தாகும். கால்கைகள் இல்லமல் மண்ணில் ஊர்ந்து வரும் அப்பாவி ஜீவன்களான பாம்புகளை பார்த்து வீராதி வீரர்கள் கூட எதற்காக பயப்பட வேண்டும்? பாம்பு கடித்தால் அல்லது கொத்தினால் மரணம் அடைந்து விடுவோம் உயிர் போய்விடும் என்ற மரண பயமே பாம்பின் மேல் பயமாக வந்துவிட்டது எனவே மனிதன் பாம்பை விலகிவைக்க துவங்கி விட்டான் என்று சிலர் கருதுகிறார்கள்.

வானத்தை கிழித்து கொண்டு தெறித்து விழுகின்ற மின்னலை பார்த்து மனிதன் பயந்தான் அதை எதிர்க்க தன்னால் இயலாது என்பதை உணர்ந்து அதை வணங்க துவங்கினான் காதை கிழிக்கும் பேரோசையோடு வருகின்ற இடியை பார்த்தும் பயந்தான் அதனால் வணங்கினான். மழையை பார்த்து காற்றை பார்த்து பயந்தான் அதனால் அவைகளையும் வணங்கினான். காட்டு மரங்களை எரித்து சாம்பலாக்கும் நெருப்பையும் பார்த்து அஞ்சி நடுங்கினான் அதனால் அதனையும் வணங்கினான். இப்படி பயத்தின் அடிப்படையிலேயே இறைவழிபாடு என்பது தோன்றியது அதன் விரிவாக்கமே மதங்கள் என்று சில அறிஞனர்கள் கருதுகிறார்கள். இக்கருத்து முற்றிலும் சரியானது தானா? என்பதை எண்ணி பார்க்க வேண்டும். மனிதனால் கண்டறியபட்ட ஆதிகால வேதங்கள் நான்கும் இயற்கை சக்திகளை வணங்குகிறது. அதனால் இந்து மதமும் கூட பயத்தின் அடிப்படையில் உருவானது என்ற கருத்து பலராலும் நம்பப்பட்டு வருகிறது. இதுவும் முற்றிலும் சரிதானா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.




**கடவுள் உருவாக்கிய மதம்**

இந்துமதம் தவிர்த்த மற்ற மதங்கள் குறிப்பாக ஐரோப்பாவிலும் அரேபியாவிலும் தோன்றிய மதங்கள் இறைவன் மீது அச்சப்பட வேண்டும். என்ற கருத்தை வலியுறுத்தி இறை அச்சத்தை முன்னிறுத்தி பேசுகின்றன.

ஆனால் இந்து மதத்தின் ஆதிகால நூல்களாக இருக்கட்டும் அதற்கு பிறகு வந்த நூல்களாக இருக்கட்டும். அவற்றில் எதிலும் கடவுளை பார்த்து பயப்படு என்ற கருத்து வரவேயில்லை அதர்மம் செய்வதற்கு பயப்படு கோழையாக இருப்பதற்கு அச்சப்படு என்ற கருத்துக்கள் தான் இருக்கிறதே தவிர மற்ற மதங்கள் சொல்வது போல இந்துமதம் இறை அச்சத்தை பற்றி பேசவே இல்லை. அதனால் தான் நான்கு வேதங்கள் இயற்கையின் நிகழ்வுகளை போற்றி வணங்கினவே தவிர அஞ்சி நடுங்கி என்னை தாக்காதே என்று முறை யிடவில்லை.

இதை இங்கே எதற்காக சொல்கிறேன் என்றால் கிருத்தவ மதத்திலும் சரி இஸ்லாம் மதத்திலும் சரி பாம்புகளை சாத்தானின் வடிவமாக அச்சப்பட கூடிய உருவமாக கருதுகிறார்கள். அதே போலவே பாம்புகளின் மீது கொண்ட அச்சத்தின் வளர்ச்சியே இந்து மதத்தின் நாக வழிபாடாக வந்திருக்க வேண்டும். என்ற கருத்து நிலவி வருகிறது. ஹிந்து ஜனங்கள் பயத்தின் காரணமாக எதையும் வழிபடவில்லை எனும் போது பாம்புகளை மட்டும் கண்டு ஏன் அஞ்சி வழிபட வேண்டும் என்பதை சற்று சிந்திக்க வேண்டும்.

இந்துமத வரலாற்றை தொடராக சொல்லி வருகின்ற போது அதனுடைய தத்துவங்களை வழிபாட்டு பிரிவுகளை சொன்னிர்கள் அதில் நியாயம் இருக்கிறது இந்து மதத்தின் கிளைகள் தான் ஜைனம், பௌத்தம், சீக்கியம் என்றீர்கள் அதையும் ஒத்து கொள்ளல்லாம். அந்த வகையில் நமது சிந்தனை விரிவடைந்து வரும் போது தீடீரென பாம்புகளை பற்றி பேச வேண்டிய அவசியம் என்ன என்று சிலருக்கு தோன்றும். நாம் இங்கே இதை பற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அது என்ன கட்டாயம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்து மதத்தை தாக்குபவர்கள் எதிர்த்து விமர்சனம் செய்பவர்கள் நம் மீது வைக்கின்ற மிக முக்கிய குற்றசாட்டு நீங்கள் கல்லை சிலையாக வடித்து இது கடவுள் என வழிபாடுகிறீர்கள். ஓடுகின்ற ஆற்றையும் உயர்ந்து நிற்கின்ற மலைகளையும் சாமி என்று கையெடுத்து கும்பிடுகிறீர்கள் போனால் போகட்டும் என்று விட்டு விடுகிறோம். ஆனால் சின்ன சின்ன பிராணிகளை கூட நீங்கள் விட்டு வைப்பதில்லை சிங்கம், புலி, யானை சிலந்தியை கூட வணங்குகிறீர்கள் இது என்ன பைத்தியகாரத்தனம் கொல்லவரும் பாம்பை கூடவா வழிபட வேண்டும் உங்கள் அர்த்தமற்ற வழிபாட்டிற்கு எல்லையே இல்லையா? என்று கிண்டல் செய்கிறார்கள் இது மட்டுமல்ல எங்கள் புனித நூல்கள் பாம்புகளை சாத்தான்கள் என்று வர்ணனை செய்கின்றன ஆனால் உங்கள் தெய்வ திருமேனிகளிலோ பாம்புகள் நர்த்தனம் செய்கின்றன அப்படி என்றால் உங்கள் சாமிகள் சாத்தானின் கூட்டாளியா என்று நம்மை பார்த்து கேட்கிறார்கள்.

மாற்று மதத்தினரின் சிறுபிள்ளை தனமான கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் நமக்கு இல்லை என்றாலும் நம்மில் பலருக்கு கூட பாம்புகளை வழிபடுவதன் உண்மை நோக்கம் என்னவென்று தெரியாது. அவர்களுக்கு அதை விளங்க வைத்தால் தான் பறந்து விரிந்த இந்துமத கருத்துக்களை ஓரளவாவது புரிந்து கொள்ளும் வகை ஏற்படும். ஏனென்றால் நாக வழிபாடு என்பது அர்த்தமற்ற சடங்கு அல்ல. அதனுள் ஆயிரம்



ஆயிரம் தத்துவ கருத்துக்கள் மறைந்து கிடக்கிறது. அவைகளை சாம்பல் நீக்கி நிஜமான நெருப்பு துண்டுகளாக வருங்கால தலைமுறையினருக்கு எடுத்து கொடுக்க வேண்டிய அவசியம் நமக்கு கண்டிப்பாக இருக்கிறது.




பாம்புகள் இல்லாத இந்துமத பிரிவுகள் இல்லை என்றே சொல்லலாம். ஸ்ரீ வைஷ்ணவத்தில் ஆண்டவனாகிய நாராயணன் படுத்து கொண் டிருப்பதே பாம்பனை மீதுதான். ஆனந்த தாண்ட வம் ஆடுகின்ற சிவபெருமானின் உடல் முழுவ துமே பாம்புகள் அலங்கார வளையங்களாக தொங்குகிறது அன்னை ஆதிபரா சக்திக்கு குடை பிடிப்பதும் விநாயகரின் இடை ஆபரணமாக இருப்பது முருகபெருமானின் திருவடியில் வீழ்ந்து கிடப்பதும் பாம்புகளே ஆகும். இதை மட்டுமல்லாது நாக தேவதை என்ற தனி தெய்வமும் உண்டு கிராமபுறங்களில் உள்ள சிறு தெய்வங்ககுக்கு கூட பாம்புகள் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.



இந்து மதத்தில் இருந்து பிரிந்த புத்த மதத்திலும் பாம்புகளுக்கு பஞ்சமில்லை அஹிம்சா மூர்த்தியான மகாவீரருக்கு குடை பிடிப்பதே ஐந்து தலை நாகம் தான் இப்படி இந்தியாவில் உள்ள சமய நம்பிக்கைகள் அனைத்திலுமே பாம்புகளுக்கு அதி முக்கிய இடம் கொடுக்கபட்டிருப்பதில் காரணம் இல்லாமல் இல்லை.

முதலில் பாம்புகளை பற்றிய தவறான நம்பிக்கைகள் பல மக்களிடம் உலக முழுவதுமே இருக்கிறது.. அதில் முதலாவது இடத்ததை பிடிப்பது பாம்பு கடித்தால் மரணத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்பது இது மிகவும் தவறுதலான கருத்தாகும். பாம்புகள் எவரையும் திட்டமிட்டு காத்திருந்து கடிப்பது இல்லை. தன்னை தற்காத்து கொள்ளவே கடிக்கிறது. அதுவும் பல பெரிய பாம்புகள் விஷத்தை இரக்காமல் நம்மை பயமுருத்துவவே கடிக்கிறது. பாம்பு கடிபட்டு செத்தவர்களை விட ஐயோ பாம்பு கடித்து விட்டதே என்ற பயத்தில் செத்தவர்களே அதிகம். கடிக்காத பாம்பை கண்டு நடுநடுங்குவது மனிதனின் தவறே தவிர பாம்புகளின் தவறு அல்ல.

ஒரு பாம்பை அடித்து கொல்ல செல்லும் போது அந்த பாம்பு ஏதோ ஒருவகையில் நம்மிடம் அகப்படாமல் தப்பி ஓடிவிட்டது என்றால் அல்லது சரியான முறையில் அடிபடாமல் மரண காயத்தோடு தப்பிவிட்டது என்றால் அடிபட்ட அந்த பாம்பு அடித்த நம்மை அடையாளம் வைத்து கொண்டு தேடி வந்து எப்படியாவது கொத்தி கொன்றுவிடும் என்ற ஒரு நம்பிக்கை பரவலாக மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. இதனாலேயே பாம்பை தற்காப்பிற்காக தாக்க செல்பவர்கள் கூட அதை கொல்லாமல் திரும்ப கூடாது என்ற எண்ணத்தில் கண்ணில் படுகின்ற மற்ற உயிர்களையும் சாகடித்து விடுகிறார்கள்.

நம்மை ஒரு எதிரி அநியாயமான முறையில் தாக்கிவிட்டாலோ அல்லது நாம் அநியாயம் செய்து எதிரிகளிடமிருந்து தப்பித்து விட்டாலோ பாதிக்கபட்டார்கள் கண்டிப்பாக காத்திருந்து நேரம் பாத்திருந்து தாக்க வருவார்கள். பழிக்கு பழி வாங்குவது மனிதர்களின் இயல்பு இந்த இயல்பை பாம்புகளின் மீதும் சுமத்தி பார்ப்பது மனிதனின் பழக்கமாக இருக்கிறது. இதனாலேயே அப்பாவிகளான பாம்புகளை பழிவாங்கும் பிராணிகள் என்று தவறுதலாக நம்புகிறோம். கிராமங்களில் ஒரு அழகான கற்பனை கதை உண்டு கொம்பேறி மூக்கன் என்று



ஒரு பாம்பு இருக்கிறதாம் அந்த பாம்பு கடித்து விட்டால் கடிபட்ட மனிதன் செத்துவிட்டானா? அவன் உடலை மயானத்திற்கு கொண்டு வந்துவிட்டார்களா? என்பதை அறியாமல் பாம்புக்கு அமைதி ஏற்படாதாம். அதனால் அது மயானத்தில் உள்ள எதாவது மரத்தின் உச்சி கிளையில் ஏறி காத்திருக்குமாம். உண்மையில் கொம்பேறி மூக்கன் என்று அழைக்கப்படும் பாம்பை சுருட்டை பாம்பு இனம் என்று சொல்லலாம் இது கடித்தால் கடிவாயில் எறும்பு கடித்தது போல ஒரு சிறு வீக்கம் வருமே தவிர வேறு எதுவும் செய்யாது. ஆனால் நமது பயம் கொம்பேறி மூக்கனை மரண தேவனாகவே பார்க்க வைத்து விட்டது.

இவைகள் எதார்த்தமான பயங்கள் இவற்றையும் தாண்டி அமானுஷ்யமான பயங்களும் நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் சற்று ஆழமாகவே இருக்கிறது எனலாம். பாழடைந்த கட்டிடங்கள் பழையகால அரண்மனைகள் போன்றவற்றில் பேய்பிசாசுகள் வாழ்வதாகவும் அந்த பேய்களுக்கு காவல் செய்யவும் ஏவல் செய்யவும் பாம்புகள் இருப்பதாகவும் ஒருசாரார் நம்புகிறார்கள். இதுமட்டும் அல்ல புதையல்களை பாதுகாப்பதற்கு மாய பாம்புகள் பல இருக்கிறது அவைகள் மனிதர்களை மிக கொடிய முறையில் மரணமடைய செய்துவிடும் குடும்பங்களையே அழித்துவிடும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இப்படி எத்தனையோ தவறுதலான எண்ணங்கள் பாம்புகளை பற்றி நாம் வைத்திருக்கிறோம். அவைகள் அனைத்தும் சரியென்று நம்புவது மிகவும் தவறானது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

மக்கள் பாம்புகளை இப்படி நம்புவது நமது முன்னோர்களுக்கு தெரியாதா? அப்படி தெரிந்திருந்தும் அவர்கள் அவைகளை வணக்கத் திற்குரிய பொருள்களாக கருதுவது ஏன்? என்ற எண்ணம் வருவதை தடுக்க முடியாது. பாம்புகளை வழிபாட்டிற்கு கொண்டுவந்ததற்கான மூல காரணம் அச்சங்கள் அல்ல அதற்குள்ளும் அர்த்தங்கள் இருக்கிறது என்பதை முதலில் உணர வேண்டும். இந்த உலகில் இறைவனால் படைக்க பட்ட அனைத்து உயிர்களிடத்திலும் சங்கலி தொடர் போன்ற ஒருவித தொடர்பு இருக்கிறது. இதில் சில தொடர்பு கண்ணுக்கு தெரியும் சில தெரியாது.

மனிதனது வெளிப்புற தோற்றத்திற்கும் சில குணங்களுக்கும் குரங்குகளோடு தொடர்பு இருப்பதாக நவீன விஞ்ஞானம் கூட சொல்கிறது. குரங்கில் இருந்துதான் மனிதனே பரிணாமம் அடைந்தான் என்று விஞ்ஞானம் சொல்வதில் சில வாத பிரதிவாதங்கள் இருந்தாலும் அவற்றை உண்மை என்று பலரும் நம்பி வருகிறார்கள். மனிதனது வெளித்தோற்றத்தோடு குரங்குகள் எப்படி நெருக்கமாக சம்மந்தபடுகிறதோ அதே போல நமது உள்ளுறுப்புகளோடு சில விலங்குகளின் உள்ளுறுப்புகளும் நெருக்கமாக சம்மந்தபடுகிறது.

உதாரணமாக பன்றிகளின் இதயமும் நுரையீரலும் மனிதனது உறுப்புகள் போலவே இருப்பதாக மருத்துவ விஞ்ஞானம் சொல்கிறது. பன்றியின் மரபணுக்களில் மனிதனது மரபணுக்களை கலந்துவிட்டால் அவைகளின் இரத்தமும் மனிதனது இரத்தத்தை போலவே ஆகிவிடும் அதன் உறுப்புகளும்

aanmeegamalar.c



அந்த இரத்தங்களை ஆதாரமாக கொண்டு இயங்க தோன்றிவிடும் அதன் பிறகு நோய்பட்ட மனிதர்களுக்கு செயற்கை இதயம் செயற்கை நுரையீரல் பொருத்துவதை போல பன்றிகளின் நுரையீரலையும் இதயத்தையும் எடுத்து கூட பொருத்திவிடலாம் என்று சொல்கிறார்கள். இதற்கான ஆராய்ச்சி தொண்ணூறாம் ஆண்டு முதற்கொண்டே இங்கிலாந்து நாட்டில் நடந்து வருகிறது.

மனிதனது உருவத்திற்கும் உள்ளுறுப்புகளுக்கும் எப்படி சில விலங்குகள் நெருக்கமாக வருகிறதோ அதே போலவே சில உயிரினங்களின் உடல்வாகு மனிதனது ஆத்மாவோடு மிக நெருக்கமாக வருகிறது என்று நமது முன்னோர்கள் கண்டறிந்து இருக்கிறார்கள். பசு, காகம், பாம்பு போன்றவைகள் அந்த விலங்குகளாகும். பசுவடிவில் தேவர்களும் முன்னோர்களும் இருப்பதாகவும் காகத்தின் வடிவில் பித்ருக்கள் வருவதாகவும் சொல்லபடுவது நமக்கு தெரியும். ஆனால் பாம்பு வடிவாக மனித ஆத்மாக்கள் வருவதாக யாரும் சொல்லி கேள்விபட வில்லையே என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. அதற்கான விளக்கம் தரவேண்டியது கடமையாகும்.

பொதுவாக நமது மக்கள் நல்ல பாம்பு என்ற நாகபாம்பை அடித்து கொள்வதற்கு யோசிப்பார்கள். காரணம் அவைகள் நமது வழிபடும் தெய்வங்களோடு மிக நெருக்கமான சம்மந்தம் வைத்து கொள்வது என்று நமக்கு தெரியும். ஆனால் இதுமட்டும் அல்லாமல் இதையும் தாண்டிய மறைபொருளான காரணங்கள் இருக்கிறது. அவற்றை பார்க்கும் போது அதிசயமாகவும் வியப்பாகவும் இப்படியும் இருக்குமா? என்று நம்பப முடியாததாகவும் இருக்கலாம். ஆனால் நான் இப்போது சொல்லபோவது ஆன்மீக உலகில் பலகாலமாக ரகசியமாக பாதுகாக்க பட்டுவரும் சத்தியமான உண்மைகள்.

இறைவனை அடைவதற்கு மனிதனுக்கு உள்ள ஒரே வழி உடம்பையும் மனதையும் ஒடுக்கி தவம் செய்வதே ஆகும். அந்த தவமானது இறையனுபவத்தை நேரடியாக பெறுகின்ற வரை தொடர வேண்டும். அப்படி தொடர்வதற்கு உடம்பு என்பது அவசியம் தேவை ஆனால் ஒருவன்



e-magazine aanmeegamalar.com

உடம்பை பெறுவதும் இழப்பதும் அவனவன் கர்மாவை பொறுத்தே அமைகிறது. கர்மப்படி குறுகிய காலத்தில் உடல் அழிந்து போகவேண்டிய சூழல் இருந்தால் அந்த உடலுக்கு சொந்தமான ஆத்மா தனது ஆன்மீக பயணத்தை வேறொரு உடம்பு எடுத்து தான் மேற்கொள்ள வேண்டும். அதாவது இன்னொரு பிறப்பு தேவை ஆனால் சில தவஞானிகள் மீண்டும் பிறக்க விரும்புவது இல்லை இதனால் நைந்து போன தங்களது பழைய உடல்களை விட்டுவிட்டு காலம் முடிந்து போன பாம்புகளின் உடல்களில் புகுந்து கொள்கிறார்கள்.

பாம்புகளாக வாழ்வதில் ஞானிகளுக்கு பல லாபங்கள் இருக்கின்றன. அதில் முதல் லாபம் பாம்புகள் இருக்கும் இடங்களுக்கு அதிகமாக மனிதர்கள் வருவது கிடையாது. மனித நடமாட்டம் இல்லாத பகுதிகளே தவம் செய்வதற்கு சிறந்த இடங்கள். அடுத்தது பாம்புகளின் உடல் இயங்குவதற்கு அதிகபடியான உணவுகள் தேவையில்லை. ஒருமுறை உணவு எடுத்து கொண்டால் சில மாதங்கள் வரை உணவே இல்லாமல் வாழலாம். உட்கார்ந்த இடத்திலேயே நகராமல் ஆடாமல் அசையாமல் தவம் செய்வதற்கு இதைவிட வேறு என்ன வசதிகள் தேவை. எனவே பல சித்தர்கள் சர்பங்களின் வடிவில் தவம் செய்வதற்கே விரும்புகிறார்கள். அதிலும் நாகபாம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு சிறப்பான காரணங்கள் இல்லாமல் இல்லை. மக்கள் நாகத்திடம் கொண்ட அச்சம் மற்ற பாம்புகளின் மீது கொள்வது சற்று குறைவு எனவே மனிதன் அச்சபடுகின்ற வடிவத்தில் இருந்தால் அவனது தொல்லை முற்றிலுமாக இருக்காது.

இதனால் தான் நமது பெரியவர்கள் நாகங்களை தேவையில்லமல் அடிக்க கூடாது என்று சொன்னார்கள். நாம் அடிக்கும் நாகத்தில் ஏதாவதொரு சித்தர் இருந்து தவம் செய்யலாம். கொலை செய்வதை விட கொடிய பாவம் தவத்தை கலைப்பதாகும். அந்த பாவத்தை அறியாமல் கூட செய்துவிட கூடாது. எனவே அதை நம்மை போன்ற சாதாரண மனிதர்கள் செய்து கர்ம பாரத்தை அதிகமாக சுமக்க கூடாது என்ற நல்ல எண்ணத்திலேயே பாம்புகளை அடிக்காதே வணங்கு என்று நமது முன்னோர்கள் சொன்னார்கள். இது மட்டுமல்ல பாம்புகளை இறைவடிவமாக வழிபடுவதற்கு இன்னும் அழுத்தமான ஆழமான காரணங்கள் இருக்கின்றன அவற்றை அடுத்து சிந்திப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்




நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









e-maga
aanmeegamalar.com

# வாலில் மணியுடன் காட்சி தரும் அனுமன் வரலாறு



ஸ்ரீராமர் சீதையை மீட்க ராவணனுடன் போர் புரிய இலங்கைக்கு புறப்படும் முன் வானரப்படையை திரட்டிக் கொண்டிருந்தார். வானரங்களில் உயரமானவை குட்டை யானவை என்று பல வகை இருந்தது. அதில் சிங்கலிகா என்று அழைக்கப்படும் குள்ளமான வானரங் கள் கொண்ட ஒரு படை இருந்தது. இதில் ஆயிரம் வானரங்கள் இருந்தன.

இந்த வானரங்கள் கூட்டமாக சென்று எதிரியின் படை வீரர்கள் மேல் விழுந்து பற்களால் கடித்துக் குதறியும் நகங்களால் பிராண்டியும் போரிடும். போருக்குப் புறப்படும் வீரர்களை வழியனுப்பும் போது அவர்கள் குடும்பத்தார்களின் கண்களில் கண்ணீர். அவர்கள் உயிருடன் பத்திரமாக திரும்பி வர வேண் டுமே என்ற கவலையில் இருந்தார் கள். அதைக் கவனித்த ராமர் அவர்களிடம் கூறினார் யாரும் கவலைப்பட வேண்டாம். என் படை வீரர்களை பத்திரமாக திருப்பிக் கொண்டு வந்து சேர்ப்பது என் பொறுப்பு என்றார்.

ராமருக்கும் ராவணனுக்கும் போர் ஆரம்பமானது. கடும் போர் நடந்து கொண் டிருந்தது. ராவணனின் படையில் பல முக்கியமான வீரர்களும் படைத் தலைவர்களும் மடிந்தார்கள்.

தூங்கிக் கொண்டிருந்த தன் தம்பி கும்பகர்ணனை எழுப்பி போரிடச் சொன்னான் ராவணன். ராட்சசனைப் போல்

இருந்தாலும் கும்பகர்ணன் மிகவும் நல்லவன். கும்பகர்ணன் இந்த போர் வேண்டாம் நீங்கள் சீதையைக் கடத்தியதற்காக ராமனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ராவணன் கேட்கவில்லை. வேறு வழியின்றி அண்ணனின் ஆணைப்படி போருக்குப் புறப்பட்டான் கும்பகர்ணன். கும்பகர்ணனின் ராட்சத உருவத்திற்கு ஏற்றாற் போல் அவனது தேரும் மிகப் பெரியதாக இருந்தது. தேரின் முன்புறம் பெரிய பெரிய மணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. போர் தொடங்கி சிறிது நேரத்தில் ராம பாணத்திற்கு பலியானான் கும்பகர்ணன். தேரிலிருந்து சாயும் போது கும்பகர்ணனின் கை பட்டு ஒரு மணி கழன்று கீழே விழுந்தது. கீழே விழுந்த மிகவும் பெரிய பாரமான மணி போரிட ஒன்றாக ஓடிக் கொண்டிருந்த ஆயிரம் வானரங்கள் மேல் விழுந்து அவர்களை மூடி விட்டது. திடீரென்று தங்கள் மேல் எதையோ வைத்து மூடிவிட்டதைப் போன்று உணர்ந்த வானரங்கள் பயந்து விட்டன. ஒரே இருட்டு. நல்ல வேளை மணி விழுந்த இடம் கரடு முரடாக இருந்ததால் சுவாசிக்க காற்று வந்தது. சில மணி நேரங்கள் ஆன பிறகும் அவர்களைக் காப்பாற்ற யாரும் வரவில்லை. ஒரு வானரம் சொன்னது இந்த சுக்ரீவனை நம்பி வீணாகப் போய் விட்டோம். நாம் எல்லோரும் சாகப்போவது உறுதி என்றது.

சுக்ரீவனும் அனுமனும் ஒன்றும் செய்யப் போவதில்லை நம்மைக் காப்பாற்ற நம் தலைவிதி இப்படியே கிடந்து சாக வேண்டியதுதான் சொன்னது இன்னொரு வானரம். ராமன் சொன்னாரே போருக்கு புறப்பட்டவர்களை எல்லாம் பத்திரமாக உயிரோடு திரும்ப கொண்டு வந்து சேர்ப்பது அவர் பொறுப்பு என்றாரே அவர் என்ன செய்தார் இன்னொரு வானரம் சொன்னது.

இதைக் கேட்ட மற்ற வானரங்களும் ஆமாம் ஆமாம் என்றன. இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவர்களில் ஒரு மூத்த வானரம் எல்லோரையும் அதட்டியது. முதலில் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவதை நிறுத்துங்கள். நான் சொன்னதை மட்டும் செய்யுங்கள். எல்லோரும் கண்களை மூடிக்கொண்டு ராமனை மனதில் நினைத்துக் கொண்டு ராம் ராம் ராம் என்று ஜெபம் செய்யுங்கள்.

ராமன் நம் எல்லோரையும் நிச்சயம் காப்பாற்றுவார் என்று சொன்னது.

எல்லா வானரங்களும் அப்படியே செய்தன. ராமரால் ராவணனும் கொல்லப்



e-magazine
aanmeegamalar.com



பட்டான் போர் முடிந்தது. சீதையை மீட்டதும் அயோத்திக்கு திரும்ப ஆயுத்தமானார்கள். அப்போது ராமர் சொன்னார் சுக்ரீவா நம் படையில் எல்லோரும் பத்திரமாக இருக்கிறார்களா? பார்த்து எண்ணிக் கொண்டு வா என்றார். அதற்கு சுக்ரிவன் எண்ணி விட்டேன். ஆயிரம் சிங்கலிகர்கள் மட்டும் காணவில்லை என்றான் சுக்ரீவன்.

அதற்கு ராமர் மற்றும் ஒரு முறை சரியாக எண்ணி வா என்றார் ராமர். ராமனின் ஆணைப்படி மற்றொருமுறை எண்ணிவிட்டு வந்த சுக்ரீவன் சொன்னான். தங்கள் ஆணைப்படி இன்னொரு முறை எண்ணினேன். ஆயிரம் சிங்கலிகர்கள் மட்டும் காணவில்லை என்றார். உடனே ராமர் அனுமா நீயும் என்னுடன் வா. நாம் அந்த ஆயிரம் வானரங்களை தேடுவோம் என்றார் ராமர்.

அனுமனும் ராமரும் வானர்களைத் தேடி போர்க்களத்தில் நடந்தார்கள். பல இடங்களில் மடிந்து கிடந்த படை வீரர்கள் உடைந்து கிடந்த தேரின் பாகங்கள் அம்புகள் கேடயங்கள் என்று எல்லாவற்றையும் கிளறிப் பார்த்தார் அனுமன். சிங்கலிகர்கள் தென்படவில்லை. திடீரென்று ராமர் ஒரு இடத்தில் நின்றார். அனுமா அங்கே பார். ஒரு பெரிய மணி தெரிகிறது என்றார்.

ராமர் சொன்னது புரிந்து விட்டது அனுமனுக்கு. இருவரும் அந்த இடத்திற்கு விரைந்தார்கள். சஞ்சீவி பர்வதத்தையே தன் ஒரு கையால் தூக்கிக் கொண்டு பறந்த அனுமன் தன் வாலின் நுனியை அந்த மணியின் வளையத்தில் நுழைத்து தூக்கினான்.

அனுமன் மணியைத் தாக்கியதும் அதன் கீழ் ஆயிரம் சிங்கலிகர்கள் கண்களை மூடிக்கொண்டு கைகூப்பியபடி ராமநாமம் ஜபித்துக் கொண்டிருந்தன. பல மணி நேரத்திற்குப் பின் வெளிச்சமும் காற்றும் பட்டதும் கண்களைத் திறந்தன வானரங்கள்.

எதிரே ஸ்ரீராமனும் அனுமனும் நின்றிருந்தார்கள். வரிசையாக கை கூப்பியவாறு நின்று கொண்டிருந்த வானரங்கள் கண்ணீருடன் ராமரிடம் பிரபுவே என்ன நடந்தது என்று தெரியாமல் இருட்டில் பயந்து அடைந்து கிடந்த நாங்கள் ஏதேதோ தவறாகப் பேசி விட்டோம். உங்கள் மேலேயே சந்தேகப்பட்டு விட்டோம். எங்களை மன்னித்து அருள வேண்டும் என்று சொல்லி ஆயிரம் வானரங்களும் ராமனின் பாதங்களில் விழுந்து வணங்கின. அதைக்கேட்டு புன் முறுவல் செய்த ராமர் எல்லா வானரங்களையும் தன் கையால் தடவிக்கொடுத்தார்.

ராமர் அனுமனைப் பார்த்து சொன்னார் அனுமா வாலில் பளபளக்கும் மணியுடன் நீ இப்படி நிற்கும் காட்சி எவ்வளவு சுந்தரமாக இருக்கிறது தெரியுமா? இந்தக் கோலத்தில் உன்னை தரிசிப்பவர்களுக்கு பக்தி, ஞானம், வைராக்கியம், எதிலும் வெற்றியும், கிட்டும் என்று வாழ்த்தினார். கர்நாடகா ஆந்திரா மற்றும் தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்களிலும் பல ஊர்களில் வியாசராஜர் பிரதிஷ்டை செய்த 732 அனுமன் விக்கிரகங்களிலும் வாலில் மணி தொங்கி கொண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீராமஜெய ராம ஜெய ஜெய ராமா..!

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம், சென்னை 600117
தொலைபேசி
எண்: 9940460969.

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 180 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்



# புதுடெல்லி சரோஜினி நகர் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஏகாதச ருத்ர பாராயணம்

சரோஜினி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி புத்தி அம்பாள் சமேத கற்பக விநாயகர் திருக்கோயிலில் 7 ஜூலை, ஞாயிறு அன்று ஸ்ரீ மஹன்யாஸ பாராயணம் மற்றும் ஏகாதச ருத்ர ஜபம் மிகவும் விமரிசையாக நடந்தது.

காலை 8.00 மணிக்கு, விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, சங்கல்பம், புண்யாஹவசனம் மற்றும் கலச ஸ்தாபனம் நடைபெற்றது.

8.30 மணிக்கு மஹன்யாஸ பாராயணம், இதைத் தொடர்ந்து, ஏகாதச ருத்ர ஜபம், ஸ்ரீ சித்தி புத்தி அம்பாள் சமேத ஸ்ரீ கற்பக விநாயகர், மற்றும் ஓங்காரேஸ்வருக்கு அபிஷேகம், நாமார்ச்சனை, உபசார பூஜைகள் மற்றும் கலச அபிஷேகம் நடைபெற்றது. ரித்விக்குகள் பலர் இதில் திரளாக பங்கேற்று பாராயணம் செய்தனர்.

ஸ்ரீ கற்பக விநாயகர், அனுமன், நவ கிரஹ சன்னதிகள் சிறப்பு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தீபாராதனை நடைபெற்றது. பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



வரவிருக்கும் பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு, லட்சார்ச்சனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி, ஆகஸ்ட் 27ஆம் தேதி வரையிலும், தினமும் காலை மற்றும் மாலையில் மூலவர் கற்பக விநாயகருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

# புது தில்லி ஸ்ரீ ஐஸ்வர்ய மகா கணபதி கோவில் 37வது ஆண்டு மஹோத்ஸவம்

வட மேற்கு பகுதி, கேசவ புரத்தில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி பெற்ற, ஸ்ரீ ஐஸ்வர்ய மகா கணபதி கோவிலில், 37வது ஆண்டு மஹோத்ஸவம் ஐந்து நாட்கள் (3 7 ஜூலை)

e-magazine
aanmeegamalar.com







மிகவும் விமரிசையாக நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆஸ்திக சமாஜம் செய்திருந்தது.

முதல் நாள் காலை ஸ்ரீ கணபதி மற்றும் துவஜஸ்தம்ப பூஜையுடன் தொடங்கியது. உலக நன்மை வேண்டியும், அமைதியான, வள மான மற்றும் ஆரோக்கியமான எதிர்காலம் அனை வருக்கும் அமையவும், முக்கிய ஹோமங்கள் இதில் நடத்தப்பட்டன.

இரண்டாம் நாள் காலை, கணபதிஹோமத்துடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, சங்கல்பம், புண்யாஹவசனம், கலச ஸ்தாபனம் நடைபெற்றது. இதையடுத்து, மஹன்யாஸ பாராயணம், ஏகாதச ருத்ர ஜபம், ஸிவாஷ்டோத்தர ஸத நாமாவளி, ஸ்ரீ ருத்ர நாம த்ரிஸதீ நாமார்ச்சனை, மிருத்யுஞ் சய மற்றும் ருத்ர ஹோமங்கள் நடைபெற்றது. கும்ப கோணம் வாத்தியார் சேனாதிபதி தலைமையில், ரித்விக்குகள் மற்றும் வேத விற்பன்னர்கள் திரளாக இதில் பங்கேற்று பாராயணம் செய்தனர்.

பூர்ணாஹூதியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. கோவிலில் அமைந்துள்ள சிவபரிவார், அனுமன், நவகிரஹ சன்னதிகள் கலச அபிஷேகம் செய்து சிறப்பு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. மாலை ஸ்ரீ ஐஸ்வர்ய மகா கணபதி உற்சவ மூர்த்தியை மேளதாளங்கள் முழங்க ஏந்தியவாறு கோவில் காலனியை சுற்றி ஊர்வலமாக பக்தர்கள் எடுத்து வந்தனர்.

மீதி நாட்களில் கணபதி ஹோமம், ஸ்ரீ ஸூக் தம், துர்கா ஸூக்தம், சண்டி, நவகிரஹம், தர்ம சாஸ்தா மற்றும் ஆஞ்சநேயர் ஹோம பூஜைகள்,

சுஹாசினி, வடு மற்றும் தம்பதி பூஜைகள் நடத்தப்பட்டன. ஆன்மிக அன்பர்கள் திர ளாக இதில் பங்கேற்று நிகழ்ச்சியை மேலும் சிறப் பித்தனர்.

மஹோத்ஸவம் மிகச்சிறந்த முறையில் நடந்தேற உதவிய அனைவருக்கும் ஆஸ்திக சமாஜம் அமைப்பின் தலைவர் டி. என். சிவராமகிருஷ்ணன் தனது நன்றியை தெரிவித்தார்.

இந்த கோயிலுக்குச் செல்வது பக்தர்களுக்கு புதிய பலத்தை அளிக்கிறது, இதனால் அவர்கள் கஷ்டங்களை எதிர்கொண்டு வெற்றியை நோக்கி செயல்பட முடியும். ஸ்ரீ ஐஸ்வர்ய மகா கணபதி தம்மைப் பின் பற்றுபவர்களுக்கு உதவி செய்து அவர்களின் கவலை களையும் துக்கங்களையும் நீக்கி அருள் செய்கிறார்.



டெல்லி
தியாகராஜன்

–டெல்லி தியாகராஜன்
9868423215

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

e-magazine

aanmeegamalar.com

இதுவரை வெளிவந்த

**180** க்கும் மேற்பட்ட இதழ்களை




## aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

ஆன்மிகமலர்
மெயில் புக்




e-mag
aanmeegamalar.com

# நவகிரக தோஷம் போக்கும் நாதரூபன்

ஈசனது கட்டளைக்கு இணங்கி, ஒன்பது அமைச்சர்கள் இப்பூவுலகை ஆட்சி செய்து வருகின்றனர். அவர்களே நவகோள் நாயகர் களான சூரியன் முதலான ஒன்பது கிரகங்கள். இந்த ஒன்பது கிரகங்களும் ஓர் சிவாலயத்தில் வடகிழக்கு திசையான ஈசான பாகத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர்.

அவர்கள் வீற்றருளும் ஸ்தானத்தில் முருகன் குடிகொண்டு பக்தர்களின் குறைகளை தீர்த்து வைக்கின்றார். அந்த அற்புதமிக்க திருத்தலம்தான் கூந்தலூர்.

இத்தலத்தின் ஈசான திசையில் உள்ள புனிதமிகு தீர்த்தத்தில்...ஜனகரின் மகளும், ஸ்ரீ இராமபிரானின் துணைவியாரும், ஸ்ரீ லக்ஷ்மி தேவியின் ஸ்வருபமான அன்னை சீதா பிராட்டி நீராடிய போது, சீதா தேவியின் கூந்தலில் இருந்து சில முடிகள் உதிர்ந்தது. அதனால் இப்பதிக்கு கூந்தலூர் என்ற பெயர் உண்டானதாக ஜம்புகாரண்ய புராணம் விவரிக்கின்றது.

இப்பூவுலகின் மொத்த நிலப்பகுதியும் ஆதியில் “ஜம்பூத்வீபம்“ என்று அழைக்கப்பட்டுள்ளது. அதாவது “நாவல் தீவு” என்பதே இதன் பொருளாகும். அவ்வகையில் சிறப்பு பெற்ற நாவல் மரக்காடாக இருந்த இடத்தில் ஈசன் தோன்றி உலகோரை காத்ததால் இத்தல ஈசர் ஸ்ரீ ஜம்புகாரண்யேஸ்வரர் என்று அழைக்கப்படுகின்றார்.

ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷியின் பிரதான சீடரான ரோமச முனிவர் அரி சொல் ஆற் றின் தென்கரையில் தவம் செய்து வரும் வேளை யில், தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அகத்தி யரின் திருவாக்குப்படி அஷ்டமாசித்தியால் தனது ரோமத்தின் வழியே தங்கம் வரவழைத்து, தந்து, ,அவர்களது வறுமையை நீக்கி வந்தார். ஈசனது திருவிளையாடல் காரணமாக பொன் வரவழைக்கும் சித்து ஒரு சமயம் பலிதமாகாமல் போனது. உடன் ரோமசர் தனது தாடியை





நீக்கிவிட்டு, குளிக்க மறந்து நாவல்காட்டீசரை தரிசிக்க சென்றுள்ளார். அவரை உள்ளே வரவிடாமல் தடுத்தனர், கணபதியும், கந்தனும்.

தவறுணர்ந்து மனம் வருந்திய ரோம மகரிஷி ஆலய வாசலிலேயே சிவனை தியானத்திருக்க..... அங்கேயே வந்து தனது திவ்ய திருக்கயிலை தரிசனத்தை காட்டியருளினார் அரனார்.

அதோடு, ரோமசர் இங்கு ஈசனோடு ஐக்கியமானார். ஆலய ஈசான பாகத்தில் ஜீவசமாதியுற்றார். அதன் மேலே கந்தனும் கோவில் கொண்டார்.

ரோமசர் தபோரிஷி மட்டுமில்லாமல் ஓர் சிறந்த சித்தபுருஷரும் ஆவார். இதனால் இத்தலத்தில் நவகிரக ஸ்தானத்தில் வீற்றருளும் கந்தனை பக்தர்கள் வழிபடும்போது, ஞானஸ்கந்தரின் அனுகிரகத்தோடு, ரோமசரின் அருளும், கிரகாதிபதிகளின் திருவருளும் இரட்டிப்பாக கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்திருத்தலத்தை திருநாவுக்கரசர் தனது க்ஷேத்திரக்கோவையில் வைப்புத்தலமாக போற்றியுள்ளார். அதோடு, அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் ஒன்றை பாடி அருளியுள்ளார்.

கிழக்கு நோக்கிய ஆலயம் தோரணவா யிலுடன் திகழ்கிறது. இராஜகோபுரம் காணப்படவில்லை. உள்ளே... நுழைந்ததும் முதலில் தென்புறத்தில் சித்தி கணபதி தனி சன்னிதி கொண்டுள்ளார். வடகிழக்கு திசையான ஈசான திசையில், நவகிரகங்கள் இருக்கும் ஸ்தானத்தில், நவகிரகங்களுக்கு பதிலாக வள்ளி தெய்வானையுடன் கந்தன் குடிகொண்டு அருள்பாலிக்கின்றார். எதிரே சனீஸ்வரர் முருகனைப் பார்த்தவாறு காட்சி தருகின்றார்.

கணபதி மற்றும் கந்தனை வணங்கி, பின் நேராக சிவன் சன்னதியை நோக்கி நகர்கின்றோம். முதலில் பலிபீடம், மற்றும் நந்தியம்பெருமான் காட்சி தருகின்றனர். தென்திசை பார்த்தவாறு தனி சன்னிதி கொண்டு அருள் மழை பொழிகின்றாள் அன்னை ஸ்ரீ ஆனந்தவல்லி. பின் வெளியே வந்து மகா மண்டபத்தில் நிற்கிறோம். இங்கே நால்வர், கணபதி மற்றும் திருமால் ஆகியோர் காட்சி தருகின்றனர். அதோடு இடது புறத்தில் அம்பிகையின் பழைய சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. கருவறையில் நெடிய பானம் கொண்டு திருவருள் கூட்டுகின்றார் ஸ்ரீ ஜம்புகாரண்யேஸ்வரர். அவரை கரம் குவித்து மனமொன்றி வணங்குகின்றோம்.

ஆலய வலம் வருகையில் சிவாலய கோஷ்ட மூர்த்தங்களை தரிசிக்கின்றோம். அதோடு ஒரே வரிசையில் நிற்கும் நவக்கிரகங்களையும் தரிசனம் செய்கின்றோம்.

அற்புதங்கள் நிகழ்த்தும் தலம். இயற்கையான சூழலில் அமையப்பெற்றுள்ளது. இங்கு தல விருக்ஷமாக நாவல் மரமும், தல தீர்த்தமாக சீதா

e-magazine
aanmeegamalar.com







e-magazine
aanmeegamalar.com



தீர்த்தமும் உள்ளன. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம் தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி வரை 7 மணி வரையும் திறந்திருக்கும். அனேக சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புடன் நடத்தப்படுகின்றன. அதோடு, கார்த்திகை மாத சஷ்டி, வைகாசி விசாகம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய தினங்களில் முருகனுக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன.

ஒருவரது ஜாதகத்தில் சனி செவ்வாய் சேர்க்கை, சனி செவ்வாய் பார்வை அமையப்பெற்றவர்களுக்கு ஓர் வரப்பிசாதமாக அமைந்துள்ளது இத்தலம். மேற்கண்ட அமைப்பு உள்ளவர்கள் வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து வருவர். அவர்கள் இவ்வாலயத்திற்கு வந்து, ஓர் மஞ்சள் பையில் தேங்காய் தாம்பூலம் தக்ஷணை வைத்து, முருகனுக்கு அர்ச்சனை செய்து, மூன்று முறை வலம் வந்து, அந்த மஞ்சள் பையை கந்தன் கருவறைக்கு முன்னே உள்ள கொடிக்கயிற்றில் கட்டி பிரார்த்திக்க வேண்டும். எந்தவித வேண்டுதலாக இருந்தாலும், 3 முதல் 300 நாட்களுக்குள் நிறைவேறும் என்பது இங்கு விசேஷ பிரார்த்தனையாக உள்ளது.

மேலும் சனி செவ்வாய் தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள், சனிக்கிழமை செவ்வாய் ஹோரையிலும், செவ்வாய்க்கிழமை சனி ஹோரையிலும் இங்கு ஆலயத்திற்கு வந்து, முருகனுக்கும் சனிக்கும் அபிஷேகம் செய்து, மாலை சாற்றி, முருகனுக்கு சிவப்பு வஸ்திரமும், சனிக்கு நீல வஸ்தரமும் சாற்றி, முருகனுக்கு செந்துவரை சுண்டலும், இனிப்பும் படைக்க வேண்டும். சனிக்கு எள்ளுருண்டை படைத்திட வேண்டும். பின்னர், அர்ச்சனை செய்து பிரார்த்தனை செய்ய.... குழந்தை வரம், கல்யாணம், புது வீடு போன்ற அனைத்தும் சுபமாய் அமைகின்றது. அதோடு, கொடிய நோய்களும் நீங்குகிறது. வறுமை நீங்கி செல்வ செழிப்பு உண்டாகிறது என்பது இங்கு வரும் பக்தர்களின் அனுபவபூர்வ உண்மையாகும்.

கும்பகோணத்தில் இருந்து நாச்சியார்கோயில் வழியாக பூந்தோட்டம் செல்லும் சாலையில் எரவாஞ்சேரிக்கு அருகில் அமைந்துள்ளது கூந்தலூர்.



மோ.கணேஷ்

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.



## காசியில் நடைபெறும் முன்னோர் பூஜை

# தமிழகத்தில் குறிச்சி காசி விஸ்வநாதர் கோவிலிலும் நடைபெற்று வருகிறது

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ளது. ஸ்ரீ வழிவிடு பெரியநாச்சிஅம்மன்கோவில் வளாகத்தில் உள்ளது. குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில். இங்கு உள்ள சிவலிங்கம் காசி கங்கை கரையில் பூஜித்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது.

இங்கு நடைபெறும் பிரதோஷ விழாவில்பக்தர்கள் அனைவரும் கங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து தொட்டுவழிபாடுசெய்யலாம். ஆண்டு தோறும் தை, ஆடி, புரட்டாசி அமாவாசை தினங்களில் காசி கங்கை கரையில் முன்னோர்களுக்கு பூஜை செய்வது இங்கு முன்னோர்களுக்கு பக்த்தர்கள் திதி தர்பண பூஜைகள் நடைபெறுகிறது. மேலும் கும்பாபிஷேகத்திற்க்கு கோவில் நிர்வாகம் சார்பில் இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்க பட்டு வருகிறது.

வரும் ஆகஸ்ட்4 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினமாகும் அன்று காலை 6 மணியில் இருந்து மதியம்12 மணிவரை பக்தர்கள் முன்னோர்கள் திதிதர்பண பூஜை செய்து கங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து காசிவிஸ்வநாதரை வழிபடலாம்.

கோவில் நிர்வாகம் சார்பில் தர்பணபொருள்கள் பூ பழம் எள் தர்பணம் செய்யும் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கபடுகிறது.

மானாமதுரை பரமக்குடி செல்லும் சாலையில் உள்ள குறிச்சி காசிவிஸ்வநாதரை காசி ராமேஸ் வரம் செல்லமுடியாத பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்து காசியாத்திரை பலனை பெறலாம் என்று கூறப்படுகிறது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

பஜன்மண்டலியினர்,

ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,

ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,

கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,

அன்னதானம் செய்பவர்கள்,

பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

வாட்சப் எண்: 9444228203

# புரந்தரதாசர் தியாகராஜர் இசை விழா





(Estd. 1965 / Regn.No S– 2628)

RAMAKRISHNAPURAM SOUTH INDIAN SOCIETY (Regd.)

In association with

INDIA INTERNATIONAL CENTRE

Cordially invites you all to

10th Edition of Purandaradasa Tyagaraja Music Festival

on 7th July, 2024 (Sunday)

at Lecture Room–II, (IIC Annexe), Max Mueller Marg, New Delhi-110003

PROGRAMME

| | | |
|---|---|---|
| 5.45 PM | Vaibhav Vaidyanathan<br>Soumya Kannan<br>Ratul S Kumar | Vocal<br>Violin<br>Mridangam |
| 6.05 PM | M Aditya<br>Siddesh Ganesh<br>G Swaminathan | Vocal<br>Violin<br>Mridangam |
| 6.25 PM | S K Mridula<br>Soumya Kannan<br>Ratul S Kumar | Vocal<br>Violin<br>Mridangam |
| 7.00PM | Keerthana Vinod<br>Siddesh Ganesh<br>G Swaminathan | Vocal<br>Violin<br>Mridangam |
| 7.35 PM | Sneha Satish<br>Siddesh Ganesh<br>G Swaminathan | Vocal<br>Violin<br>Mridangam |
| 8.10 PM | Distribution of Prizes and Honouring of Artists | |

R K Vasan
President
M : 8826655855

ராமகிருஷ்ணாபுரம் சவுத் இந்தியன் சொசைட்டி மற்றும் இந்தியா இன்டர்நேஷனல் சென்டர், இணைந்து நடத்திய, புரந்தரதாசர் தியாகராஜர் இசை விழா வர்ணம் வாய்ப்பாட்டு போட்டியில் 11வது தொகுப்பில் வெற்றி பெற்றவர்கள், மாலை 5.45 மணி முதல், இந்தியா இன்டர்நேஷனல் சென்டர், லெக்ச்சர் ஹால் மிமி, (மிமிசி அனெக்சி), லோதி சாலை,

புது தில்லி, ஜூலை 7ஆம் தேதி ஞா யிற்றுக்கிழமை கர்நாடக இசை கச்சேரி வழங்கினார்கள்.

கச்சேரி வழங்கிய வர்ணம் குரல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்: (சீனியர் பிரிவில் முதல் பரிசு) சினேகா சதீஷ், இரண்டாவதாக எஸ்.கே. மிருதுளா வென்றனர். மேலும், ஜூனியர் பிரிவில் முதல் பரிசு கீர்த்தனா வினோத், இரண்டாம் பரிசு எம் ஆதித்யா, மூன்றாம் பரிசு வைபவ் வைத்தியநாதன், ஆகியோருக்கு வழங்கப்பட்டது. வெற்றியாளர்களுக்கு, விருது கோப்பை, சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ஆகியவை வழங்கப்பட்டது.

முன்னதாக, குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து, சங்கத் தலைவர் ஆர்.கே.வாசன் வரவேற்புரை வழங்கினார். சங்கத்தின் துணைத் தலைவர் எஸ்.கிருஷ்ணசாமி கலைஞர்களை அறிமுகப்படுத்தினார். கலைஞர்களுக்கு வயலினில் சௌமியா கண்ணன் மற்றும் சித்தேஷ் கணேஷ், தவிர, மிருதங்கத்தில் ரதுல் ஸ் குமார் மற்றும் ஜி சுவாமிநாதன் ஆகியோர் பக்க வாத்தியம் வாசித்தனர். மேலும், நொய்டாவின் வேதிக் பிரசார் சன்ஸ்தான் (வி பி எஸ்) மூத்த குழு உறுப்பினர்கள் : எ பாலாஜி பொது செயலாளர், ஆர் ராமசேஷன் பொருளாளர், மற்றும் ராஜு ஐயர் இணைச் செயலாளர், வெற்றி பெற்ற பாடகர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். சங்கத்தின் சார்பில், துணைத் தலைவர் எஸ்.கிருஷ்ணசாமி, சங்க செயலாளர் எஸ்.வெங்கடேஷ், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களை கவுரவித்தனர்.



எஸ்.வெங்கடேசன்

ஆர் ராமசேஷன், கர்நாடக இசையில் இளம் திறமைகளை ஊக்குவிப்பதில் ஆர் கே பி சொசைட்டியின் சேவைகளைப் பாராட்டினார். மேலும், அற்புதமான



இசை நிகழ்ச்சி வழங்கிய கலைஞர்களை ஆசீர்வதித்தார். மேலும், ஸ்ரீ ஹயக்ரீவா : குரு சரண், ஸ்ரீ வரத கணேசர் கோவில், தில்ஷாத் கார்டன், டெல்லி, பொது செயலாளர் : ஜி ரகுராமன், மற்றும் தில்லி மற்றும் அண்டை பகுதிகளில் இருந்து இசை ஆர்வலர்கள், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆர்.கே.பி. சங்கம் சார்பில் ஆர்.கே.வாசன் இவர்களை கவுரவித்தார். எஸ் கிருஷ்ணசாமி நன்றியுரை வழங்கினார்.

தலைநகரில் பதிவு செய்யப்பட்ட ராம கிருஷ்ணாபுரம் தென்னிந்திய சங்கம், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசை ஆர்வலர்களுக்கு சேவை செய்யும் பழமையான கலாச்சார அமைப்பு களில் ஒன்றாகும். கர்நாடக இசையை, இளம் திறமைகளுக்கு, ஊக்குவிக்கிறது, மற்றும் தலை நகரில் பல்வேறு இசை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார்கள், என்பது குறிப்பிடத்தக்கது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# ஸ்ரீ ராம ஜெயம் என்ற மந்திரத்தின் பலன்

'ஸ்ரீ ராம ஜெயம்' என்னும் ஜென்ம ரக்ஷா மந்திரத்தை சிந்தித்தால் எப்பேர்பட்ட முடிக்க முடியாத கஷ்டங்களையும் தீர்த்து வைப்பாராம் அனுமான்.

ராம நாமாவை சிந்தித்தால் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்த பலன் உண்டாகும் என்று ஈஸ்வரன் கூறுகிறார்.



செல்வம் பெருக, கடன் தீர, உத்யோக முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், பணப் பிரச்சனை நீங்க, திருமண தடை நீங்க, குழந்தை பாக்கியம் உண்டாக, நோய் விலக, ஆரோக்யம், மன நிம்மதி, குடும்ப ஒற்றுமை, கண் த்ருஷ்டி நீங்க, தம்பதி அன்யோன்யம், சனி தோஷம் நீங்க, தசா புத்தி தோஷம் நீங்க, நவக்ரஹ தோஷம் விலக, வழக்கில் வெற்றி பெற, எதிரி தொல்லைகள் நீங்க, செய்வினை விலக, கல்வியில் தேர்ச்சி பெற, ஞாபக சக்தி, மனபயம் நீங்க, திக்கு வாய் நீங்க, சிறந்த பேச்சு திறமை, லக்ஷ்மி கடாக்ஷம், ஐஸ்வர்யம், வீடு, வாகனம், ஆபரணம் சேர, தீர்க்க சுமங்கலி தன்மை, எதிலும் வெற்றி அடைய, அரசு வேலை, அரசியலில் வெற்றி, வாக்கு பலிதம், கணவன் மனைவி சேர, மனோ தைரியம் பெருக, 'ஜெய் ஸ்ரீ ராம் ஜெய் ஸ்ரீ ராம் ஜெய் ஸ்ரீ ராம் என்ற மந்திரத்தை கூறினால் இவை அனைத்தும் கைகூடும்.

– எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல்9750333265

# கோபம் மனிதனிடம் இருந்தால் அசிங்கம், அதுவே கடவுளிடம் இருந்தால் நரசிங்கம்

சீடன்: கிரியை என்றால் எப்படி இருத்தல் வேண்டும்?

ஞானி: சுலபமாக உள்ளது எல்லாம் கிரியை. பாவத்திற்கு தக்கபடி தான் கிரியைகள் வரும்.

சீடன்: குருநாதர்களின் கருணை எப்படிபட்டது?

ஞானி: உனக்கு முன் அனுபவம் உண்டா என்று கேட்க மாட்டான் குருநாதன் சொல்லித் தருவான்.

சீடன்: கோபமும், பொறாமையும் போக மறுக்கிறதே?

ஞானி: அதை இறைவனிடம் கொடுத்து விடு, போய்விடும்.

சீடன்: கடவுள் அதை வைத்து என்ன செய்வான்?

ஞானி: கோபம் மனிதனிடம் இருந்தால் அசிங்கம். அதுவே கடவுளிடம் இருந்தால் நரசிங்கம் என்ற அழகிய சிங்கம்.

சீடன்: தெய்வங்கள் புதிய விளக்கம் சொல்லுங்களேன்?

ஞானி: மனிதனின் மிக உயர்ந்த எதிரொலி கள்.

சீடன்: நரசிம்மம் கோபமுள்ள கடவுளா?

ஞானி: உன் மாதிரி கோபமுள்ளவனல்ல. நரசிம்மத்தை உபாசித்து ஞானம் பெற்றவர்கள் உண்டு. கோபமுள்ள மனிதனை உபாசித்தால் கோபம் தான் வரும்.

சீடன்: ஜெபத்தால் நரசிம்மரை அடைய முடியுமா?

ஞானி: கடவுளுக்கு ரூபத்தைக் கொடுத்து விட்டு ஜபத்தை நம்பாமல் இருந்தால் அதன் பெயர் பக்தியா?

சீடன்: எவ்வளவு பக்தி இருந்தாலும் மரணம் பொது தானே?

ஞானி: செத்த பின்னும் முன்னுக்கு வருவது ஞானிகளும், மகான் களுமே. அதுவே ஆராதனை.

சீடன்: பக்தி வாழ்க்கைக்கு உதவுமா?

ஞானி: பக்தி என்று முதல் தோன்றுகின்றதோ, அன்றே வாழ்க்கை சுவையாக இருக்கத் தோன்றுகிறது.

சீடன்: பக்தியைத் தத்துவமாக்கினால்?

ஞானி: தத்துவங்கள் எவ்வளவோ உண்மைகளைச் சொல்லலாம். ஆனால்என்று அவைகள் அனுபவங்கள் ஆகிறதோ அன்றே அவைகள் அர்த்தமுள்ளவைகளாகின்றன.

சீடன்: மகான்களை சந்தித்தால் இது சாத்தியமா?

ஞானி: உண்மையைப் புரிந்து கொண்டால் தான் சந்திப்பின் பலன் உண்டு.

சீடன்: மனிதனின் சுத்தமான பக்கம் எது?

ஞானி: மனிதனின் உள் பக்கமான மனது. அது சுத்தமாக இருந்தால் ஞானம் பிறக்கிறது.

சீடன்: வெளி பக்கம் என்று உண்டா?

ஞானி: (சிரித்தபடி) பரபக்கம் என்று நமக்குத் தெரியாத உயர்ந்த விஷயங்களை உணர்த்துபவன் இறைவன்.

சீடன்: பாசங்களில் கட்டுண்டு கஷ்டப்படுவதை தவிர்ப்பது எப்படி?

ஞானி: உண்மையான பாசம் எது என்பது புரியும்போது.

சீடன்: இது எப்பொழுது சாத்தி யம் சுவாமி?



ஞானி: குருவிடம் உபதேசங்களை பெற்று அதை உண்மையுடன் பின்பற்றினால் சாதுத்தன்மையுடைய "பசு" போன்ற உயிர் புண் ணியம் அடைந்து "பதி" என்ற சிவபெருமானிடம் தங்க இடம் கிடைக்கும். அப்பொழுது "பாசம்" என்பதின் உண்மைத் தன்மையை உணர்ந்து கடமையை மட்டும் செய்வான். அப்பொ ழுது அனைத்தும் விளங்கும்.



e-magazine aanmeegamalar.com

**சீடன்:** மஹான்களை சரியாக புரிந்து கொள்ள முடிவதில்லையே?

**ஞானி:** மனதை புரிந்து கொள்ளாதவர்களால் அது முடியாது.

**சீடன்:** ஒழுக்கமாகஇருக்க ஏன் மனிதன் கஷ்டப்படுகிறான்?

**ஞானி:** ஆராய்ச்சி செய்யாமலே அதை கடினம் என்கிறான் மனிதன்.

**சீடன்:** ஒழுக்கம் சர்ச்சைக்குரியதாகி விட்டதே?

**ஞானி:** கருத்து மாறுபாடு இருந்தால் தான் அபிப்ராயம் உண்டாகும். ஒழுக்கம் பற்றி இரண்டு அபிப்ராயங்கள் இருக்காது.

**சீடன்:** பின் ஏன் சராசரி மனிதன் பயப்படுகிறான்?

**ஞானி:** ஒழுக்கமாய் இருந்தால் கலியுகத்தில் துனபம் என எண்ணும் மனிதன் எப்பொழுது அது சுகம் என் காண்கிறானோ அப் பொழுது அதை விடமாட்டான். கடவுளை எண்ணி இதை ஆராய்ந்தால் சுகம்.

**சீடன்:** சட்டத்தால் ஒழுக்கம் வருமா?

**ஞானி:** எப்பொழுது அவை மனிதனின் பழக்கவழக்கங்களாக மாறு கிறதோ அப்பொழுது ஒழுக்கம் இயற்கையாகி விடும்.

**சீடன்:** கடவுளை எதற்காக எண்ண வேண்டும்?

**ஞானி:** இறந்து போன பின் எங்கே போக வேண்டும் என்பதற்காக கடவுளை எண்ணுவதில்லை. உயிருடன் இருக்கும் பொழுது எப்படி வாழவேண்டும் என்பதற்காக உபயோகப்படுவன் கடவுள்.

**சீடன்:** கடவுள் பக்தி எப்பொழுது துவங்கும்?

**ஞானி:** மனிதனின் இரண்டு கண்களுக்கு வெளி வேலை எப்பொழுது குறைகிறதோ அப்பொழுது கடவுள் பக்தி துவங்குகிறது.

**சீடன்:** அருள் எப்பொழுது கிடைக்கிறது?

**ஞானி:** மனம் கடவுளிடம் ஒட்டும்பொழுது.

**சீடன்:** உடல் சக்தி எப்பொழுது பெருகும்?

**ஞானி:** மனசக்தி குறையாமல் இருந்தால்.

**சீடன்:** அறியாமையை ஏன் கடவுள் படைத்தான்?

**ஞானி:** கடவுள் அதைப் படைக்கவில்லை. அவன் படைத்திருந்தால் அது மிக வலிமையுடையாதாக இருக்கும். அது மனித புத்தியின் சறுக்கல்.

**சீடன்:** செயலிலே சந்தோஷம் ஏற்படுவது எப்படி?


**ஞானி:** முடிவு எப்படி இருந்தாலும் பொருள் தெரிந்து செயல்படும்போது சந்தோஷம் ஏற்படுகிறது.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன்**

**C.V. நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:

அழகுராஜா

செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,

குருபிரியா

வேல்

♦♦♦

வடிவமைப்பு

SML கிராபிக்ஸ்

செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்

**9444228203**




# அம்பாளுக்குரிய ஆடிமாதம் உருவான வரலாறு

தமிழ் மாதத்தின் ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு. அதன்படி, அம்மனுக்கு உகந்ததும், விழாக்களுக்கும் பஞ்சமில்லாத ஆடிமாதத்திற்கு என தனிச் சிறப்பு உண்டு. அப்படி சிறப்பு வாய்ந்த இந்த மாதத்திற்கு ஆடி என பெயர் வந்தது

பௌர்ணமியன்று சந்திரன் எந்த நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறாரோ அந்த நட்சத்திரமே மாதங்களின் பெயராக அமைந்திருக்கும். சித்திரையில் சித்திரை நட்சத்திரத்திலும், வைகாசியில் விசாகத்திலும், ஆனியில் அனுஷத்திலும் பௌர்ணமி அமையும். ஆடியில் ஆஷாட நட்சத்திரத்தில் பௌர்ணமி இருக்கும். ஆஷாடத்தில் இரண்டு உண்டு. முதலில் வருவது பூர்வ ஆஷாடம். பின்னர் வருவது உத்தர ஆஷாடம். பூர்வ ஆஷாடம் என்பது பூராடம் என்றும், உத்தர ஆஷாடம் உத்திராடம் என்றும் சொல்லப்படுகிறது.

உத்திர ஆஷாடத்தில் பௌர்ணமி வரும் ஆடி மாதத்தை வடமொழியில் ஆஷாடீ என்று கூறப்பட்டது. அதுவே தமிழில் ஆடி என்று மருவி விட்டது. இவ்வாறு ஆடி மாதம் பிறந்ததாகச் சொல்வர்.





## புராணக் கதை:

ஆடி என்பது ஒரு தேவ மங்கையின் பெயர். ஒரு சமயம் பார்வதி தேவி, ஈசனைப் பிரிந்து தவம் செய்யும் நிலை ஏற்பட்டது. சிவபெருமான் தனிமையில் இருப்பதை அறிந்த ஆடி என்னும் தேவகுல மங்கை பாம்பு உருவம் எடுத்து, கயிலையின் உள்ளே யாரும் அறியா வண்ணம் நுழைந்தாள். பிறகு பார்வதி தேவியாக உருமாறி சிவபெருமான் அருகில் சென்றாள்.

அப்போது ஒரு கசப்பான சுவையை சிவபெரு மான் உணர்ந்தார். தன்னை நோக்கி வந்தவள் பார்வதி அல்ல என்பதை அறிந்து, தன் சூலாயுதத் தால் ஆடியை அழிக்க முயன்றார். அப்போது சூலாயுதத்திலிருந்து வெளிப்பட்ட தீப்பொறி ஆடியை புனிதமடையச் செய்தது.

அவள் ஈசனை வணங்கி, ஒரு நிமிடமாவது தங்கள் அன்பான பார்வை என்மீது பட வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு நடந்துகொண்டேன். என்னை மன்னித்தருள வேண்டும் என்று வேண் டினாள். ஆனால் சிவபெருமான், என் தேவி இல்லாத சமயம் நீ அவளைப் போல உருமாறி வந்தது தவறு. எனவே, பூவுலகில் கசப்புச் சுவை யுடைய மரமாகப் பிறப்பாய் என்றார்.

அவள் விமோசனம் கேட்க, கவலை வேண்டாம், நீ மரமாகிப் போனாலும் ஆதிசக்தியின் அருளும் உனக்குக் கிடைக்கும். சக்தியை வழிபடுவது போல் உன்னையும் வழிபடுவார்கள். ஆடியாகிய உன் பெயரிலேயே ஒரு மாதம் பூலோகத்தில் அழைக்கப்படும். அந்த வேளையில் நீ கசப்பு குணம் கொண்ட மரமாக இருந்து மக்களுக்கு நல்லதைச் செய்வாய் என்று அருளினார்.

ஆடி என்ற தேவலோகத்துப் பெண் தான் பூலோகத்தில் வேப்ப மரமாகத் திகழ்கிறாள். ஈசனின் சாபமே அவளுக்கு வரமாக மாறியது. தெய்வாம்சம் பொருந்திய வேம்பு ஆதிசக்தியின் அம்சமாக உள்ளது. நோய்கள் பலவற்றை குணமாக்கும் சக்தி கொண்டவளாக திகழ்ந்தாள் அந்த மங்கை. இவ்வாறு ஆடி என்ற பெயர் வந்தது என்பதை புராணக் கதை கூறுகிறது.

## ஆடி மாத சிறப்புகள்:

ஆடி மாதத்தில் வரும் நான்கு செவ்வாய்க் கிழமைகளிலும், அம் மன் கோவில்களுக்கு சென் றால் எண்ணிய காரியம் ஈடேறும். இந் நாளில், பெண்கள் அதிகாலையில் குளித்து, குலதெய்வ வழிபாடு நடத் திய பின் துர்க்கை அம்மன், முருகன் கோவில்களுக்கு சென்று வழிபடுவது சிறப்பு. வசதியுள்ளவர்கள், கடைசி செவ்வாய்க்கிழமை அன்று குழந்தைகளை வீட்டுக்கு வரவழைத்து அவர்களை தெய்வமாக வழிபட்டு விருந் தளிக்கலாம். ஆடி செவ்வாய்க்கிழமைகளில் அம்பாளை வழிபட்டு, மங்கல கௌரி விரதம் கடைபிடிப்பதாலும் விசேஷ பலன்கள் கைகூடும்.

ஆடி மாதம் துளசி வழிபாடு அரிதான பல பலன்களை தரும். ஆடி மாதம் வளர்பிறை நாட் களில் துளசியை வழிபட்டு வந்தால், ஐஸ்வர்யம் பெருகும். நீண்ட ஆயுள் கிடைக்கும்.

ஆடி வெள்ளி வழிபாடு செய்வது சகல பாக்கியங்களையும் அள்ளித்தரும். திருமண பாக்கியம் கைகூடி வரும். புதுமண தம்பதியருக் கும், நீண்ட காலமாக குழந்தை பாக்கியம் எதிர்பார்த்திருப்போருக்கும் விரைவில் குழந் தை பாக்கியம் உண்டாகும். சுமங்கலிப் பெண் கள் கணவனின் ஆயுள் அதிகரிக்கவும், திருமண மாகாத பெண்கள் விரைவில் திருமணம் கூடி வரவும் விரதம் மேற்கொள்கின்றனர்.

– எம்.ஏ.நிவேதா
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல் 9750333265

e-maga
aanmeegamalar.com

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 180 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

eBook FREE DOWNLOAD

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை




பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி



பொதுவாக கர்மாக்கள் நேரடியாக எளிதில் அழிந்து விடுவதில்லை. கர்மாக்களை சார்ந்துள்ள அகங்காரத்தை அழித்து விட்டால் பாவ கர்மாக்கள் அழிந்து விடும் என்று சாஸ்திரம் கூறுகிறது. சஞ் சிதா கர்மாவினால் வரக்கூடிய பாவ புண்ணியங்களை அனுபவவித்து தீர்க்கவோ அழிக்கவோ முடியாது. ஞானத்தால் மட்டுமே சஞ்சிதா கர்மாவை அழிக்க முடியும். அதாவது ஒருவர் ஞானம் அடைந்து விட்டால் சஞ்சிதா கர்மா நீக்கப்பட்டு விடுகிறது. அதாவது சஞ்சிதா கர்மா அழிந்து விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

கர்மாவிற்கு ஆதாரமாக இருப்பது அகங்காரம் ஆகும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒருவர் அகங்காரத்தை முற்றிலும் நீக்கி விட்டால் அங்கு கர்மாவிற்கு இடமில்லை. அதாவது கர்மா அழிந்து விடுகிறது.

81

எடுத்துக்காட்டாக ஒருவர் கார்பெட்டின் மேல் நின்று கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கார்பெட்டை இழுத்து விட்டால் அவர் நிற்க முடியாமல் நிலை தடுமாறி கீழே விழுந்து விடுவார். அதுபோல் கர்மாவிற்கு ஆதாரமமாக இருக்கும் அகங்காரத்தை முற்றிலும் நீக்கி விட்டால் பாவ கர்மாக்கள் நம்மை அறியாமல் அது அழிந்து விடும்.

ஆகாமி கர்மாவும் ஞானத்தினால் அழிந்து விடுகிறது. முற்றும் துறந்த ஞானிகளின் ஆகாமி பாவ கர்மாக்கள் எப்போது அழிகிறது. எடுத்துக்காட்டாக ஒரு முற்றும் துறந்த ஞானி இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஞானி அக்ஞானியாக வாழ்ந்து, அவரது நாற்பதாவது வயதில் ஞானம் பெற்று முற்றும் துறந்த ஞானியாகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் ஞானியாக இருப்பதற்கு முன்பு அதாவது அக்ஞானியாக இருக்கும்போது அவர் செய்த பாவ



புண்ணிய கர்மாக்கள் சேர்ந்து விடுகிறது. அத்தகைய கர்மாவிற்கு ஆகாமி கர்மா என்று பெயர்.

அவர் ஞானம் அடைந்து முற்றும் துறந்த ஞானியான பிறகு சஞ்சிதா கர்மாவைப்போல் ஆகாமி பாவ கர்மாக்கள் அனைத்தையும் அழித்து விடுகிறார். அதாவது முற்றும் துறந்த ஞானிகள் ஆகாமி கர்மாவை ஞானத்தால் அழித்து விடலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஞானிகள் அகங்காரத்தை தனது தவ வலிமை மற்றும் அறிவின் துணைகொண்டு நீக்குவதால் ஆகாமி கர்மாவும் அவரை விட்டு நீங்கி விடுகிறது அல்லது அழிந்து விடுகிறது.

ஞானம் அடைந்த பிறகு முற்றும் துறந்த ஞானிகளுக்கு ஆகாமி கர்மாவால் பாவ புண்ணியங்கள் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஏற்பட்டாலும் அனைத்தும் அவர் ஞானம் அடைந்து விட்டால் அந்த ஞானத்தால் அழிந்து விடும் என்று சாஸ்திரம் கூறுகிறது. காரணம் ஆகாமி கர்மா அகங்காரத்தை சார்ந்து இருக்கிறது. முற்றும் துறந்த ஞானிகளிடம் அகங்காரம் என்பது இருப்பதில்லை. எனவே ஆகாமி கர்மா ஞானிகளுக்கு நேரடியாக முற்றிலும் அழிந்து விடுகிறது. விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு எல்லாம் மனிதர்களைப்போல் பாவ புண்ணிய கர்மாக்கள் இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக பசு போன்ற சாதுவான விலங்குகள் சைவமாக இருப்பதால் அவற்றிற்கு புண்ணிய கர்மா பலன்களும், புலி, சிங்கம் போன்ற கொடிய விலங்குகள் அசைவமாக இருப்பதால் அவற்றிற்கு பாவ கர்மா பலன்கள் வந்து சேர்வதில்லை. அதாவது விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு மனிதர்களைப்போல் பாவ புண்ணிய கர்மாக்கள் இல்லை.

பொதுவாக பறவைகள், விலங்குகள் போன்ற உயிரினங்களுக்குரிய இயல்பான பிறவிக் குணங்களை மாற்ற முடியாது. ஆனால் ஞானிகள், அக்ஞானிகள் போன்றவர்கள் நினைத்தால் தங்கள் குணத்தை மாற்றிக் கொள்வதற்கு முடியும். எடுத்துக்காட்டாக நாம் உலக வழக்கில் ‘அவன் முன்பெல்லாம் யாருக்கும் அடங்காமல் அடாவடித்தனமாக இருந்தான். இப்போது எல்லோரும் விரும்பும் சாதுவாக மாறி விட்டான்’ என்று கூறுவது உண்டு.

அதேபோல் மனிதன் நினைத்தால் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை தன்னோட விருப்பப்படி தேர்ந்து எடுப்பதற்கு முடியும். அவன் விரும்பினால் சைவமாகவோ அசைவமாகவோ இருக்கலாம். மனிதர்கள் நினைத்தால் நல்ல செயல்களைத் தேர்ந்தெடுத்து அவன் தானம் தர்மம் போன்ற நன்மை தரக்கூடிய செயல்களை செயல்படுத்த முடியும். அதன் மூலம் உலகில் புண்ணிய கர்மா பலன்களை அவன் அனுபவிக்க முடியும். அதேபோல் தீய செயல்களை தேர்ந்தெடுத்து தீயவைகளை செய்யும்போது அதன் மூலம் வரக்கூடிய பாவ கர்மா பலன்களை உலகில் அவன் அனுபவிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஞானிகள் ஞானத்தினை அடைந்த பிறகு அவர்களது கர்மாக்கள் பாவ புண்ணியத்தைக் கொடுப்பது இல்லை.

e-magazine
aanmeegamalar.com

அதாவது ஞானிகள் ஞானம் அடைந்த பிறகு அவனிடம் பாவ புண்ணியங்கள் சேர்வதில்லை. குழந்தைகளுக்கு கபடம், சூது, பொறாமை போன்ற தீய குணங்கள் இருப்பதில்லை. எனவே குழந்தைகளுக்கு பாவ புண்ணியக் கர்மாக்கள் கிடையாது. ஞானியும் குழந்தைகள்போல் கள்ளம், கபடம் பொறாமை போன்ற தீய குணங்கள் இருப்பதில்லை. எனவே முற்றும் துறந்த ஞானிகளுக்கு பாவ புண்ணியக் கர்மாக்கள் என்பது கிடையாது. அதாவது ஞானிகளுக்கு பாவ புண்ணியக் கர்மாக்கள் என்பது சேருவதில்லை.

ஞானிகள் ஞானம் அடைந்த பிறகு பசுவைப்போல் அவன் சாதுவாக மாறி விடுகிறான். மேலும் அவன் மனம், வாக்கு, செயல் மூன்றிலும் உலகில் தூய்மையான புண்ணிய செயல்களில்தான் அவன் ஈடுபடுவான். எனவே அவன் பசுவைப்போல் சாதுவாக இருப்பதால் பாவ புண்ணிய கர்மாக்கள் சேர்வதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. முற்றும் துறந்த ஞானிகளைப் பற்றி ஒரு கோணத்தில் சிந்தித்துப் பார்க்கும்போது ஞானிகள் பைத்தியக்காரன்போல் மாறி விடுவான். பொதுவாக பைத்தியக்காரன் நன்மை தீமைகளைப் பற்றி அவன் அறிந்து மற்றவர்களுக்குச் செய்வதில்லை. எனவே பைத்திக்காரனுக்கு பாவம் புண்ணியம் போன்ற கர்ம பலன்கள் சேர்வதில்லை. அதுபோல்தான் ஞானிகள் சில நேரங்களில் பைத்திக்காரன்போல் இருப்பார்கள். எனவே பாவ புண்ணியக் கர்மப் பலன்கள் அவர்களிடம் சென்று சேர்வதில்லை. ஞானிகளாக இருப்பவர்கள் எல்லாம் பைத்தியக்காரன் என்று நாம் தவறாக நினைத்து அவர்களை வெறுத்து விடவும் கூடாது.

ஞானம் பெற்ற முற்றும் துறந்த ஞானிகள் பசுவைப்போல் சாதுவாகவும், சில நேரங்களில் பைத்தியக்காரன் போல் நன்மை தீமைகள் போன்றவற்றை அறியாமலும் இருக்கிறான். ஞானிகள் குழந்தையைப்போல் கள்ளம் கபடம் பொறாமை போன்றவைகள் இல்லாமல் இருப்பார்கள். எனவே ஞானம் அடைந்த முற்றும் துறந்த ஞானிகளுக்கு பாவ புண்ணியக் கர்மாவின் பலன்கள் சேர்வதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. முற்றும் துறந்த ஞானிகள் பொதுவாக தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றற்று வாழ்கிறான்.




ஞானிகள் தானம் தர்மம் போன்ற நன்மை தரக்கூடிய செயல்களை செய்தாலும் அதன் மூலம் வரக்கூடிய புண்ணிய கர்ம பலன்களை எதிர்பார்ப்பது இல்லை. அதாவது கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியதைப்போல் கடமையை செய் பலனை எதிர் பார்க்காதே என்பதைப்போல் ஞானிகள் வாழ்வார்கள். பொதுவாக ஞானிகள் செய்யக்கூடிய பாவங்களுக்கும் கர்ம பலன்கள் கிடையாது. ஞானிகள் அவரையும் அறியாமல் செய்யக்கூடிய பாவங்களுக்கு பலன்கள் அவரைப் போய் சேர்வதில்லை. அதற்குக் காரணம் ஞானிகள் எதையும் எதிர்பார்த்து செய்வதில்லை. பாவம் செய்வதால் சுகமாக வாழலாம் என்றாலும் முற்றும்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

e-magazine
aanmeegamalar.com



துறந்த ஞானிகள் எந்த சுகத்தையும் விரும்புவதில்லை. அக்ஞானிகள் போன்று பொன், பொருள், புகழ் போன்றவற்றை முற்றும் துறந்த ஞானிகள் விரும்புவதில்லை.

ஞானியர்களை நாம் வணங்கும்போது அவருடைய புண்ணியப் பலன்கள் நம்மையும் அறியாமல் நமக்குக் கிடைக்கும். ஞானிகள் நம்மைப்போல் உருவம் பெற்றிருந்தாலும் அவருக்கு ஞானம், தவம், அறிவு போன்றவைகள் இருப்பதால் ஞானியரை வணங்குவது அவரது ஞானத்தை, தர்மத்தை, வைராக்கியத்தை வணங்குவதுபோல் ஆகும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஞானிகளின் மனம் புண்படும்படி ஒருவர் பேசினால், அப்படி புண்படும்படி பேசியவர்களை பாவ கர்மாக்கள் வந்து சேரும் என்று சாஸ்திரம் கூறுகிறது. எனவே ஞானிகளை புண்படும்படி பேசவோ,செயல்படவோ கூடாது. பொதுவாக உலகத்தில் நமக்கு மேலான குணம் படைத்தவர்களை வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கும்போது வாழ்வில் அமைதி கிடைக்கும். எனவே முற்றும் துறந்த ஞானிகளை மனம் புண்படும்படி தூற்றவோ, துன்புறுத்துவோ கூடாது என்பது உலக நியதி ஆகும்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற ஞானம் பெற்று ஜீவ சமாதி அடைந்தவர்களை நம் மனம் நாடும்போது நமக்கு மன நிறைவு ஏற்படுவதோடு புண்ணிய பலன்களும் நம்மை அறியாமல் வந்து சேரும்.அதாவது நாம் புண்ணியப் கர்மாக்களை மட்டும் நாம் நாடுவோம் என்பது பொருள் ஆகும். ஒருவர் ஆன்மீகத்தில் ஈடுபடுவதற்கும் அவன் இந்த ஜென்மத்திலோ போன ஜென்மத்திலோ புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# சத்துமாவு

# Sathu maavu

**41 வகையான சிறுதானியங்களில் தயாரிக்கப்பட்டது**



## 41 ingredients



## Sathu maavu kanji

*Multigrain Porridge is the most healthy breakfast. It is rich in minerals and has high fibre content that keeps blood sugar under control.*



## ingredients

✦Ragi, ✦Samba wheat, ✦Rye, ✦White corn, ✦Black gram, ✦Green gram, ✦Millet, ✦Black cowni rice, ✦Sorghum, ✦Bamboo rice, ✦White chickpeas ✦Black chickpeas, ✦Roasted groundnuts, ✦White soybeans, ✦Horsetail rice, ✦Millet rice, ✦Varaku rice, ✦Samai rice, ✦White Ellur, ✦Black rice, ✦White Awal ✦ Sukku, ✦Cucumber seed, ✦Pumpkin seed, ✦Barley, ✦Groom samba, ✦Cashew nut, ✦Almond nut, ✦Walnut, ✦Double beans, ✦Maize, ✦Cardamom, ✦Red Rice, ✦Pistachio Nut, ✦Edible Rice, ✦Biryani Rice, ✦Red Soya Beans, ✦Gatti Elephant Rice, ✦Unity Rice, ✦Darbis Seed ✦Hindu Salt,

**மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன் பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல் வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.**

மேலும் விபரங்களுக்கு **7550199561**